

# THE MENTAL, MORAL AND MATERIAL EDUCATION

by

**Narayana Ramachandra Jaya Ram,**
**Retired Salt Sub Inspector, Hermitage,**
MAHADANA STREET, MAYAVARAM.



"சத்தியமே தர்மம் தர்மமே ஜயம்".

**மானஸ, ஸன்மார்க்க,**
**பிரகிருதத்துவ கல்வி.**

All Rights Reserved.

Ananda Sagara Press, Mayavaram.

விலை] August 1934. [அணா 2.

# அட்டவணை,


| | | பக்கம். |
|---|---|---|
| | ஸ்தோத்திரம். | 1 |
| I. | தேக ஆரோக்கியம், நன்னடத்தை, கல்வி. | 2 |
| II. | அன்பின் உடன்பாடு, சிக்ஷையின் மாறுபாடு. | 13 |
| III. | முற்காலத்தியவும், தற்காலத்தியவும் கல்விப் பயிற்சி. | 14 |
| IV. | முக்கிய கவனிப்புகள். ... ... | 28 |
| V. | பெற்றோர்களின் கடமை, மக்களின் கடமை. | 32 |
| VI. | சங்க ஸ்தாபனங்களுக்கு இன்றியமையாதனவாகிய அவசிய உருவ அமைப்புகள். | 35 |
| VII. | விவாஹத்தினுடையவும், கோவில்களுடையவும் உட்கொள்கைகள். | 37 |
| VIII. | தற்சரிதை. | 39 |


குறிப்பு:- அபிப்பிராயம் தெரிவிப்போர்களுக்கு நன்றிபாராட்டக் கடவேன்.

 

உலகெலா முணர்ந்தோதற் கரியவன்
நிலவுலாவிய நீர்மலி வேணியன்
அலகிற் சோதிய னம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

---

அத்தனை முப்பத்து முக்கோடி தேவர்க் கதிபதியை
நித்தனை யம்மை சிவகாமி சுந்தரி நேசனையெங்
கத்தனைப் பொன்னம்பலத்தாடு மையனைக் காணக்கண்க
ளெத்தனை கோடியுகமோ தவஞ் செய்திருக்கின்றனவே.

உ

ஸ்ரீராமஜயம்.

# நீதிநெறிக்கும், மனதிற்கும், பிரகிருதத்திற்கும். உரியதான பிரதமகல்வி அபிவிர்த்தியின்பொருட்டு உபாத்தியாயர்களுக்கும், பெற்றோர்களுக்கும்

# விக்ஞாபனம்.

(Elementary) ஆரம்பக் கல்விப் பாடசாலைகளின் உபாத்தியாயர்களுடைய சங்கம் பல ஏற்பட்டுள. அவைகளில் ஒன்று மாயவரம் நகரில் உளது.

(Senior Deputy Inspector of Schools) பள்ளிக்கூடங்களுக்கு மேல் அந்தஸ்துள்ள பிரதிநிதி மேல் விசாரணைக்காரரும், (Junior Deputy Inspector of Schools) பள்ளிக்கூடங்களுக்கு கீழ் அந்தஸ்துள்ள பிரதிநிதி மேல் விசாரணைக்காரரும் உபாத்தியாயர்களுடைய ஒருமனப்பாடுள்ள வேண்டுகோளை அங்கீகரித்து முறையே உத்தியோகம் பற்றின அக்கிராஸனாதிபதியாகவும் உப அக்கிராஸனாதிபதியாகவும் இருக்கிறார்கள்.

நாளது மார்ச்சு மாதம் 18உ இச்சங்கம் கூடிற்று. அவர்கள் வேறு அலுவலில் இருந்ததால் அச்சமயம் விஜயம் செய்யக்கூடாமல் நேர்ந்தது. மாயவரம் நகர் உயர்தரக் கல்விப் பாடசாலை தலைமை உபாத்தியாயராகிய மகா-௱-ஸ்ரீ V. இராகவய்யங்கார் அவர்கள் M. A. L. T., ஒருமனப்பாடுள்ள வேண்டுகோளை அங்கீகரித்து அக்கிராஸனாதிபதி ஸ்தானத்தை ஏற்று வகித்தார். சங்கம் நடைபெற்றது.

மாயவரத்தில் வசிக்கும் பென்ஷனராகிய மகா-௱-ஸ்ரீ N. R. ஜெயராமய்யர் உபந்நியசித்தார்.

## உபந்நியாஸம்.

மேன்மையுள்ள அக்கிராஸனாதிபதி அவர்களே!
அன்புள்ள உபாத்தியாயர்களே!

[illegible] ।
[illegible] ॥

நீதி சாஸ்திரம்.

சென்ற ஜனவரி மாதம் 17உயில் தஞ்சாவூர் ஜில்லா கல்வி இலாகா அதிபசர் D. Samuel Esq. M. A. L. T., அவர்கள் அக்கிராஸனாதிபதி

வகித்தபோது உபாத்தியாயர்களுடைய போக்கு வரத்து சிரமத்தையும் பொருட்சிலவையும், அவர்கள் வர அசௌகர்யப்படும் சமயங்களேயும் நிதானித்தும் பெற்ருேர்களுடைய கூட்டு உழைத்தலேயும் உத்தேசித்தும் பாலர்களின் அபிவிருத்தியின் பொருட்டு பெற்ருேர்களுடையவும் உபாத்தியாயர்களுடையவும் பாஸ்பரமான கூட்டு உழைத்தல் விஷயமாக ஒரு மாதாந்திர வார்த்தா பத்திரிகை இச்சங்கத்தினுல் பிரசுரம் செய்யலாமென்று பிரஸ்தாபித்தேன். அது அன்புடன் அங்கீகாரமாயிற்று. மாதிரி சஞ்சிகை அச்சிடும் நிலேமையிலிருக்கிறது. ஆகிலும் நான் இப்போது அது சம்மந்தமான சில வசனங்களேச் சொல்ல விரும்புகிறேன். பையன்களே போதிப்பதில் அனுபவமாயிருக்கிற பொறுமை உங்களிடம் குடிகொண்டிருப்பதால் அவைகளே பொறுமையுடனும் அன்புடனும் கேட்கக் கோறுகிறேன்.

1. தேக ஆரோக்கியம் 2. நன்னடத்தை 3. கல்வி யாகிய இம்மூன்றும் வரிசைக்கிரமமாக பிள்ளேகள் சம்மந்தமாக அத்தியாவசியமாகவே பெற்ருேர்களும் உபாத்தியாயர்களும் முக்கியமாய் கவனிக்கத்தக்கது.

## 1. தேகாரோக்கியம்.

நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம். (நோய்க்கிடங் கொடேல் ஆத்திச்சூடி) கல்வி அபிவிர்த்திக்கும் அதுதான் முக்கிய ஆதாரமாகும். அது மன ஊக்கத்தையும் உற்சாகத்தையும் உண்டாக்கும்.

ஆகையால் வேண்டிய அளவாயும் ஒழுங்காயும் போஷிப்பது பெற்ருேர்களுடைய கடமையாகும். குறைவாக போஷித்தலும் கூடாது. தேக வளர்ச்சியைக் குறைக்கும். மிதமிஞ்சி போஷித்தலும் கூடாது. (மீதூண் விரும்பேல்—ஆத்திச்சூடி) வியாதிகளுக்கேதுவாகி ஆயுளே குறைச்சுமாதலால் அதை தவிர்க்க வேண்டும்.

தடைபடாத சுத்தமான காற்றும், சூரியனுடைய மிதமான பிரகாசமும் வெளிச்சமும், சுத்த ஜல பானமும், சாதாரணமானதும் எளிதில் ஜீரணமாகக் கூடியதுமான ஆகாரமும், அழுக்கின்மையான பரிசுத்தமும், களேப்பு அற்ற ஓடுதல் நடத்தலும், செய்த வேலேயினுலுண்டான தேக சிரமத்திற்கும் ஆயாசத்திற்கும் தக்க ஒய்வும், இரவில் சாஸ்திரீயமான 8 மணி நேரம் (இரவு 9 மணி முதல் விடியிற்காலே 5 மணி வரையில்) தூக்கமும் (வைகறைத் துயிலெழு—ஆத்திச்சூடி) அதி காலேயில் எழுந்திருப்பதும் தேகாரேக்கியத்துக்கு முக்கியமான ஆதாரங்கள். சோம்பல் வியாதியை உண்டுபண்ணும். சுறுசுறுப்பு உற்சாகத்தை வளர்க்கும். வாரத்துக்கு இருமுறை (புதன், சனி) அல்லது குறைந்தது ஒரு முறை (சனி நீராடு—ஆத்திச்சூடி) சனிவாரத்தில் எண்ணெய் தேய்

த்துக்கொள்ளவேண்டும். அதினால் கண்பார்வையும், நெடுங்கால வாழ்வும், திடமும், அமைதியும், முகநிறமும், தோற்றமும், நிறைபாரமும் விர்த்தியாகிறது. பருவத்திற்கு முந்தின கிழத்தன்மையின் குணங்களையும், களைப்பையும், துன்பத்தையும் நீக்குகிறது.

## 2. நன்னடத்தை.

தேக ஆரோக்கிய விதிகளை அனுசரிப்பதும், போஜனங்களில் திட்டமாயிருப்பதும் புராணங்களை வாசிப்பதும் மானஸ சன்மார்க்க அபிவிருத்தியை உண்டாக்கும். நற்குணமுடையவர்களை சகலரும் விரும்புவார்கள். துர்க்குணமுடையவர்களை சகலரும் வெறுப்பார்கள். கெட்ட வழக்கங்களை தவிர்க்கவேண்டும். வெறுக்கத்தக்க (தீமை விளைவிக்கிற) கட்டுக்கதை புஸ்தகங்களை விலக்கவேண்டும். நம்பிக்கை வைக்கத்தகுந்தவனாகவும், ஸத்பக்தியுள்ளவனாகவும், துணைசெய்கிறவனாகவும், தயையுள்ளவனாகவும், மரியாதையுள்ளவனாகவும், அன்புள்ளவனாகவும், பணிவுள்ளவனாகவும், உற்சாகமுள்ளவனாகவும், செட்டான நிர்வாகியாகவும், மனப்பரிசுத்தமாயும், (நினைவு வார்த்தை, செய்கை), உண்மை பேசுகிறவனாகவும் இருக்கவேண்டும். இவைகள் சுவய அபிவிருத்தியையுண்டாக்கி மகிழச்சி செய்யும், நன்னடத்தை மேன்மைப்படுத்தி மகிழ்ச்சியை தரும். துர்நடத்தை இழிவுபடுத்தி கெடுதியையும், துன்பத்தையும், விளைவிக்கும்.

நற்சகவாசத்தைத் தேடவேண்டும். துர்ச்சகவாசத்தை விலக்கவேண்டும். நன்னடத்தையில் மரியாதை உண்டாகும், துர்நடத்தையில் மானக்கேடும், அவமரியாதையும் விளையும், நன்மை விதைத்தால் நன்மை விளையும், தீமைவிதைத்தால் தீமை விளையும்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே
அவரோ டிணங்கி யிருப்பதுவும் நன்றே
தீயோரைக் காண்பதுவும் தீதே
அவரோ டிணங்கி யிருப்பதுவும் தீதே.—(மூதுரை.)

## 3. கல்வி.

நன்னடத்தையை பயிற்சி செய்வதற்கு முக்கியமாக அத்தியானுகூலமானது கல்வி.

> எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்
> (கொன்றை வேந்தன்)

> கண்ணுடையயவு ரென்பவர் கற்றோர்முகத் திரண்டு
> புண்ணுடையராவர் கல்லாதவர்.—(திருக்குறள்)

> 𑌸𑌰𑍍𑌵𑌸𑍍𑌯 𑌗𑌾𑌤𑍍𑌰𑌸𑍍𑌯 𑌶𑌿𑌰𑌃 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌮𑍍 ।
> 𑌸𑌰𑍍𑌵𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌾𑌣𑌾𑌂 𑌨𑌯𑌨𑌂 𑌪𑍍𑌰𑌧𑌾𑌨𑌮𑍍 ॥
> (நீதி சாஸ்திரம்).

மெய், வாய், கண், மூக்கு, செவியாகிய ஐம் புலன்களில் கண்கள் எவ்வளவு நுட்பமாயும் மேன்மையாயும் எல்லாவற்றையும் பார்த்து மனதை ஆனந்திக்கக்கூடிய புலன். மற்ற புலன்களுடைய செய்கைக்கு கண்கள்தான் ஆதாரம்.

> கண்ணிற்சிறந்த வுறுப்பில்லை கொண்டானின்
> துண்ணிய கேளிர் பிறரில்லை மக்களின்
> ஒண்மைவாய்ச் சான்ற பொருளில்லை ஈன்றாளின்
> எண்ணக் கடவுளுமில் — (நான் மாணிக்கடிகை)

ஆகையால் கல்வியை கண்களுக்கு ஒப்பிடப்பட்டது.

> கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
> மற்றோரணிகலம் வேண்டாவாம்.—(நீதிநெறி விளக்கம்)

> குஞ்சியழகும் கொடுந்தானைக்கோட்டழகும்
> மஞ்சளழகும் அழகல்ல — நெஞ்சத்து
> நல்லம்யா மென்னும் நடுவு நிலைமையால்
> கல்வியழகேயழகு.— (நாலடியார்)

> கற்க கசடறக் கற்பவைகற்றபி
> னிற்க வதற்குத்தக.—(திருக்குறள்)

> கல்விக்கழகு கசடற மொழிதல்.— (வெற்றிவேற்கை)

> கல்வியை அடைந்தவர் கற்றவராவார்
> அதின்படி நடப்பவரே கற்றறிந்தோர்
> அதின்படி நடவாதவரே கற்றறி மூடர்

கற்காத மூடரைக் காட்டிலும் கற்றறி மூடர் மிகவும் இழிவானவர்.

மன்னனும் மாசறக் கற்றோனுஞ் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையன் — மன்னனுக்குத்
தன்றேசமல்லாற் சிறப்பில்லை கற்றோர்குச்
சென்றவிடமெல்லாஞ் சிறப்பு.— (மூதுரை)

கல்லா ஒருவன் குலநலம் பேசுதல்
நெல்லினுட் பிறந்த பதராகும்மே.—(வெற்றிவேற்கை)

நன்மை கடைப்பிடி
தீவினை யகற்று.—(ஆத்திச்சூடி)

எதைச் செய்வதென்றும் எதைச் செய்யக்கூடா தென்றும் போதிக்கிற அறிவை உண்டாக்குவதும் அந்த அறிவை வளர்ப்பதும் கல்வி.

செய்யவேண்டிய நல்ல காரியங்கள் இன்னவென்பதையும் தவிர்க்க வேண்டிய கெட்ட காரியங்கள் இன்னதென்பதையும் திட்டப்படுத்தி வற்புறுத்துவது கல்விக்குத் துணையான மனச்சாக்ஷி.

குற்றமுள்ள நெஞ்சு குறு குறுக்கும்

மனச்சாக்ஷியின் வற்புறுத்தலுக்கு விரோதமாக மீறிச் செய்தால் நிச்சயமாகவே துன்பமுண்டாகும்.

## 4. பெற்றோர்கள் கடமை.

கல்வி கற்பிக்கவேண்டியது தந்தையுடைய கடமை.

தந்தைமகற் காற்று நன்றியவையத்து
முந்தியிருப்பச் செயல்.—(திருக்குறள்)

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோனெனக் கேட்டதாய்.—(திருக்குறள்)

ஒவ்வொரு தாய் தகப்பனும் தங்களுடைய புதல்வரை நல் வழியில் பழக்கப்படுத்தவும் போதிக்கவும் கிரமமாயும் உத்தரவாதமாயும் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

விநாவ ஜீணவாநுஶ ஞூ வா ஞூஶ ஞூ ஃஷவஜ்ஜி தஃ।

கடன் வைத்த தகப்பன் பிள்ளைக்கு சத்துரு
படிக்காத பிள்ளை பிதாவுக்கு சத்துரு
படிப்பிக்காத தகப்பன் பிள்ளைக்கு சத்துரு.—(நீதி சாஸ்திரம்)

படிப்பில்லாத பிள்ளைகளும், ஜலமில்லாத ஆறுகளும் பாலமில்லாத ரஸ்தாக்களும், ஒரு பிரயோஜனமுமில்லை.

பெற்றோர்களுக்கு இல்வாழ்க்கையை நடத்த பல விஷயங்களை கவனிக்கவேண்டியிருத்தலால் தங்கள் மக்களை போதிக்கவும் நல்வழியில் பழக்கப்படுத்தவும் போதுமான சாவகாசத்துக்கு ஏதுவில்லையாதலால் தங்கள் மக்களுக்கு கல்வி கற்பிக்கவும் நல்வழியில் பழக்கவும் அவர்களை உபாத்தியாயர்களிடத்தில் ஒப்புவித்திருக்கிறார்கள். அந்த ஒப்புவித்த கடமையாகிய கற்பித்தலை நிறைவேற்றுவது உபாத்தியாயருடைய கடமையாகும்.

மாணாக்கர்கள். சுபாவம் பலவகைப்படும்

அன்னமாவே மண்ணொடு கிளியே
இல்லிக்குடம் ஆடு எருமை நெய்யரி
யன்னர் தலை இடைகடை மாணாக்கர்.—(நன்னூல்)

களி, மடி, மானி, காமி, கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன், மந்தன், தொன்னூற்கஞ்சித்
தடுமாறுளத்தன், தறுகண்ணன், பாவி
படிறன் இன்னோர்க்குபகரார் நூலே.—(நன்னூல்)

உபாத்தியாயர்கள் சுபாவம் பலவகைப்படும்

குலன் அருள் தெய்வங்கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வணக்கம்
நிலம் மலைநிறைகோல் மலர் நிகர் மாட்சியும்
உலகிய லறிவொடுயர்குணமினையவும்
அமைபவன் நூலுரை யாசிரி யன்னே

மொழிகுணமின்மையும் இழிகுண வியல்பும்
அழுக்காறு அவாவஞ்ச மச்சமாடலும்
கடிற்குடம் மடற்பனை பருத்திக்குண்டிகை
முடத்தெங் கொய்யென முரண்கொள் சிந்தையும்
உடையோரிலராசியராகுதலே.—(நன்னூல்.)

உபாத்தியாயர்கள் சுபாவம் போலவே பெற்றோர்களுக்குள்ள சுபாவமும் அதுவேயாகும். பிள்ளைகள் இளமைப் பருவத்தில் இருக்கிறார்கள். விளையும் பயிரானது முளையிலே தான் பலனை ஊகிக்கும் காலம்.

இளமையிற்கல்.—(ஆத்திச்சூடி)

இளமைப் பருவமே கல்வி கற்கவும் கற்பிக்கவும் தகுந்த மேலான காலம்.

இளஞ் செடியை இலகுவில் வளைக்கலாம் வளர்ந்து முதிர்கின்ற மரத்தை சிரமப்பட்டாலும் வளைக்க முடியாது. அதுபோலவே இளமைப் பருவத்தில் சுலபமாய் கல்வி கற்பிக்கலாம், கற்கவும் கற்கலாம். வயது --செ ஏமகிர கற்பிப்பதும் கற்பதும் கடினம்.

நீரிற்குமிழியிளமை, நிறை செல்வம்
நீரிற்சுருட்டு நெடுந்திரைகள் — நீரில்
எழுத்தாக்கும்யாக்கை, நமரங்காள் என்னே!
வழுத்தாத தெம்பிரான் மன்று.— (நீதிநெறிவிளக்கம்)

நீரில் குமிழி சொற்பகாலம் நீடித்திருப்பதுபோல நிர்ணயித்த ஆயுளில் இளமைப் பருவம் கொஞ்சகாலம்தான் இருக்கும். முதுமைப் பருவம் சீக்கிரத்தில் வந்து எய்தும். இளமைப் பருவத்தில் கல்விச் செல்வத்தை பெறவேண்டும். அந்த இளமைப் பருவம்தான் மனக்கவலையற்று மன ஊக்கத்துடனும் உற்சாகத்துடனும் இருக்கலாமாதலால் கல்வியை அடையவேண்டிய தகுந்த பருவம்.

கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
(கொன்றைவேந்தன்)

அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்விசையு நாட்டும்—உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்கும் கல்வியினூங்கில்லை
சிற்றுயிர்க் குற்றதுணை.—(நீதிநெறி விளக்கம்).

பருவத்தே பயிர் செய்.—(ஆத்திச்சூடி).

சாகுபடி காலத்தில் தக்க முயற்சிசெய்து நிலத்தைப் பண்படுத்தி விதை விதைத்து காலத்தில் நீர்ப்பாய்ச்சி காலத்தில் களை எடுத்து விவசாய விதிகளை சரிவர கவனிக்காவிட்டால் அறுவடை காலத்தில் அடையவேண்டிய பலன் இல்லாமற்போகும். அதே மாதிரியாக பையன்களுடைய இளமைப் பருவத்தில் கல்வி கற்பிக்காவிட்டாலும் அக்காலத்தில் அவர்கள் கற்காவிட்டாலும் பையன்கள் ஆயுளின் வயது செல்லச்செல்ல முதுமைப் பருவம் வந்தெய்தி கஷ்டம் அடைவதுமன்றி தகப்பன் தாய்மார்கள் மற்ற சகலருக்கும் துன்பமுண்டாக்குவார்கள் என்பது நிச்சயம். பையன்களுடைய குணம் நன்றாய்த் தெரிந்து அவர்களை அன்புடன் உற்சாகப்படுத்தி நடத்தவேண்டும்.

ஞயம்பட வுரை.—(ஆத்திச்சூடி).

இன்சொலா லன்றி யிருநீர் வியனுலகம்
வன்சொலா லென்று மகிழாதே—பொன்செ
யதிர்விளையாய்! பொங்கா தழற்கதி ராற்றண்ணென்
கதிர்வரவாற் பொங்குங் கடல்.—(நன்னெறி).

இன்சொலா னாகும் கிழமை இனிப்பிலா
வன்சொலா னாகும் வசைமனம் மென்சொலின்
நாவினா னாகு மருண்மனம் அம்மனத்தான்
வீவிலா வீடாய் விடும்.—(நான்மணிக்கடிகை).

இன்சொலாகிய நல்வார்த்தை மனமகிழ்ச்சி யுண்டாக்கி கோறிய நற்பலனைத்தரும். கடுஞ்சொல் கோறிய நற்பலனைத் தாராமல் மனத்துன்பமுண்டாக்கி முறன்பாடு செய்ய அவர்களைத் தூண்டும். "அடித்த மாடு சண்டி" என்ற வசனம்போல பையன்களை அடித்தலுடைய பலனும் மடையன்களாக ஆக்குவதுதான்.

பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் தினசரி தங்கும் நேரம் சொற்பம், வீட்டில் தங்கும் நேரம் அதிகம். நாலுச்சக்கர வண்டியில் முன்சக்கரங்களைத் தொடர்ந்து பின்சக்கரங்கள் செல்வது இயல்புபோல பெற்றோர்களுடையவும் உபாத்தியரயர்களுடையவும் நடத்தையை பிள்ளைகள் பின்பற்றுவது சகஜமே. நீதிவசனங்களைக் காட்டிலும் தினசரி அனுசரிக்கும் நல்ல செய்கைகள் ஆயிரம்மடங்கு நலமுண்டுபண்ணும். பிரதிதினமும் அதிக நேரம் பிள்ளைகளை கவனிக்கவேண்டியவர்கள் பெற்றோர்களாவார்கள். கொஞ்சநேரம் பிள்ளைகளை கவனிக்கவேண்டியவர்க்ள் உபாத்தியாயர்களாவார்கள்.

ஆயுளில் முன்வரும் வாழ்நாட்களின் பிரயோஜனத்துக்காக பற்பல ஜீவனோபாய வழிகளில் மன ஊக்கத்தையும் உற்சாகத்தையும் தரும்படியான கல்வியை பால்யர்களுக்குக் கற்பித்து புகட்டுவது உபாத்தியாயர்களேயாகும். பெற்றோர்கள் உபாத்தியாயர்களிடத்தில் கனம் பாராட்டவேண்டும். அதை அனுசரித்தே பிள்ளைகளும் உபாச்தியாயர்களிடத்தில் கனம் பாராட்டி அவர்களுடைய சொல்லைகவனித்து மேற்கொள்ளுவார்கள்

பிள்ளைகளின் அபிவிருத்திக்கு பயபக்தி, அன்பு, மரியாதை இம்மூன்றும் ஒருமைப்பாடுகள்.

உபாத்தியாயர்களின் சிரமத்துக்கு பரிகாரமாக ஜீவனோபாயத்துக்கு முட்டுப்பாடில்லாத பொருளுதவிவேண்டும். பெற்றோர்களின் முக்கிய கடமையாகிய கற்பித்தலை உபாத்தியாயர்களிடத்தில் சுமத்தியிருப்பதால் பெற்றோர்கள் பொருளுதவி செய்யவேண்டியது முக்கியமே. கவர்ன்மெண்டார் அவர்கள் கல்விச்சாலைகளை ஸ்தாபனம் செய்யவேண்டிய ஆரம்ப உதவி செய்திருக்கிறார்கள். பிறகு அவைகளை சரிவரத் தொடர்ந்து நடத்த பெற்றோர்கள் சார்ந்து பொருளுதவி செய்யவேண்டியதாகும். (Mission) கிரிஸ்துமத போதனை ஸ்தாபனங்களால் பள்ளிக்கூடங்கள் ஏற்பட்டு தொடர்ச்சியாக நடந்துவருவதே போதுமான திருஷ்டாந்தமாகும். ஹிந்துமதம் இதர மதம், போதனை ஸ்தாபனங்கள் பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி நடத்தாதலால் கிராமவாசிகளுடைய நன்மைக்காக கிராமவாசிகளே கிராமபொது ஐவேஜியில் அல்லது கிராமவாசிகளுடைய நன்கொடையாகிய பொருளுதவி செய்து பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தி நடத்துவது மிக்க நல்லது.

திண்ணைப் பள்ளிக்கூடங்கள் நடந்த காலத்தில் பெற்றோர்களும் பணக்காரர்களும், கற்றறிந்தவர்களும் உபாத்தியாயர்களுடைய ஜீவனோபாயத்துக்கு முட்டுப்பாடில்லாமல் உதவி செய்துவந்தார்கள். உபாத்தியாயர்களும் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு ஆகிய எல்லா பாஷைகளிலாவது அல்லது இவைகளில் ஒன்றிலாவது விசேஷ கல்வி தேர்ச்சியடைந்திருந்தார்கள். ஊரிலுள்ள ஜனங்களுக்கு இதிகாச புராணங்கள் பொது ஸ்தலங்களில் சொல்லிவந்தார்கள். ஜனங்களுக்குப் பக்தி, சிரத்தை, அன்பு, விசுவாசம் பெருகிவந்தது. இப்போதுள்ள உபாத்தியாயர்களோ (Department Training) இலாகா கல்விப் பயிற்றலோடு தங்கள் கல்வி அபிவிருத்தியை நிறுத்திவிடுகிறார்கள்

தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறு மறிவு.—(திருக்குறள்).

கல்விகரையில் கற்பவர் நாள்சில
மெல்லநினைக்கின் பிணிபல—தெள்ளிதின்
ஆராய்ந் தமையுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகில் தெரிந்து.—(நாலடியார்).

தம்மின்மெலியாரை நோக்கித் தமதுடைமை
அம்மா பெரிதென்றகமகிழ்க—தம்மினும்
கற்றோரை நோக்கிக்கருத்தழிக கற்றதெல்லாம்
எற்றேயிவர்க்கு நாமென்று.—(நீதிநெறிவிளக்கம்)

உபாத்தியாயர்கள் நன்னடக்கை, அறிவு அபிவிர்த்தி செய்யும்படி இதிகாச புராணங்களை தாங்கள் வாசித்து அறியவும் ஜனங்களுடைய நன்னடக்கை அறிவு அபிவிருத்திக்காக கிராம பொது ஸ்தலங்களில் அவைகளை வாசித்தும் வரவேண்டும்.

பள்ளிக்கூடத்தின் அபிவிருத்திக்காக எதெது உசிதமோ அவைகளை உபாத்தியாயர்கள் பெற்றோர்களுக்கு தெளிவாகவும் அன்பாயும் எடுத்துச்சொல்லி கற்றோர்களுடையவும் பணக்காரர்களுடையவும் சகாயத்தைப் பெறவேண்டும்.

கல்வி இலாகா விதிகளையும் போதனை விஷயங்களின் கோட்பாடுகளையும் ஜனங்களுக்கு விவகரிக்க வேண்டும். அதுபோலவே சுகாதாரம், விவசாயம், கைத்தொழில்கள் மற்றபடி தினசரி கிராமாந்திர ஜீவனோபாயத்துக்கு அனுகூலமான போதனைகள் வாரத்துக்கு ஒரு முறை கிராம பொது ஸ்தலத்தில் விவகரிக்க வேணும் அதுவுமல்லாமல் அச்சமயத்தில் பையன்களைக் கொண்டு நாடகங்களை சுலபமாக நடத்தியும் அவர்கள் படித்த விஷயங்களை தெளிவாகவும் சுருக்கமாகவும் சொல்லச் செய்து பெற்றோர்கள் தம்மக்கட் செல்வத்தைக் கண்டு மகிழச் செய்யவேண்டும்.

குழலினி தியாழினி தென்பதம்மக்கண்
மழலைச் சொற் கேளா தவர்
பெறுமவற்றுள் யாமறிவதில்லை யறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற.—(திருக்குறள்)

எந்த பாஷையிலாவது பூரண கல்வி அடையவேணும் "சொற்ப அறிவு அபாயகரமான விஷயம் அர்ப சகவாசம் பிராணசங்கடம்" என்ற விஷயம் எல்லாருக்கும் தெரிந்ததே.

பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் மனமிசைந்து உழைத்து பிள்ளைகளை கற்பித்தலின் நலம் பாலும் தெளிதேனும் கலந்த பானத்தின் நலத்தை ஒத்த இன்பத்தை தருமென்று துணிவான நிச்சயம்.

ஜீவாத்மாவுக்கு ஆயுளுடன் நீடித்திருக்க தேகாரோக்கியம் எவ்வளவு பிரதானமோ அப்படியே மனதின் அறிவையும் ஞாபகசக்தியையும் நீதிநெறிக்கும் சர்வஜனசம்பந்தத்துக்கும் எற்றதான கல்வி தேர்ச்சி செய்வது ஜீவாத்மாவுக்கு பரமானந்தகரமானதும் திருப்திகரமானதுமான நல்ல அதிர்ஷ்டமாகும்.

"முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" பழமொழிப்படி கல்வியோடுகூடிய முயற்சி பொன்மலர் நாற்றமுடைத்ததை ஒத்து திருப்திகரமான பயனைத்தரும்.

இந்த சங்கம் எற்பட்டதினால் நான் உபந்நியாசம் செய்ய சமயம் நேர்ந்தது என்பதற்கு அங்கத்தினர்கள் எல்லோருக்கும் மனமார்ந்த வந்தனம் அளிக்கிறேன்.

மனதிற்கு இசைந்ததவும் யுக்தமானவும் நீதிநெறிக் குரியவுமான விஷயங்களின் பழக்கத்துக்கும் தேர்ச்சிக்கும் எற்பட்டிருக்கிற இச்சங்கமும் அபிவிர்த்தியாவதுடன் இதைப்போலொத்த அநேக சங்கங்களும் பல இடங்களிலும் எற்பட்டு தழைத்தோங்க தெய்வ அருளை பிரார்த்திக்கிறேன். எங்கும் வியாபித்து ஆதியந்தமில்லாமல் சுயம்புவாயிருக்கிற பராபர வஸ்துவே கடவுளாவர்.

சங்கத்தை தொடர்ச்சியாய் சரிவர நடத்த பொருளுதவி வேண்டும். பிரதிமாதம் சந்திக்கும் சமயத்தில் சந்தா தொகையை சுலபமாய் செலுத்தினால் மிகவும் நலமாகும். எந்த ஸ்தாபனத்தையும் நடத்த பணமுட்டுப் பாடில்லாமல் சிலவுக்கு ஈடுபடும்படியான வரவும் கொஞ்சம் கையிருப்பு தொகையும் இருப்பதுமே சங்கம் நடப்பதற்கு சாக்ஷியாகும். அதுபோலவே சங்கத்தின் நடவடிக்கைகளும் சாக்ஷியாகும். எனக்கு கிராமாந்தர பள்ளிக்கூடங்களின் குறைவுகளோ நிறைவுகளோ எனது நேர்பார்வையால் அறிய சந்தர்ப்பம் இல்லாமல் போயிற்று. இனிமேல் வந்து பார்த்து சங்கத்தின் கூட்டத்தில் அவைகளை விவகரிக்கிறேன்.

---

குறிப்பு :— எல்லாரும் நல்லதென்று ஒப்பினார்கள். அக்கிராசனாதிபதி அவர்கள் எல்லா விஷயங்களையும் நன்றாய் விவகரித்திருக்கிறதென்பதாக தெரிவித்தார்.

19

## II. அன்பின் உடன்பாடு, சிக்ஷையின் மாறுபாடு.

மரியாதைபெற நியமங்கள் பல.

1. மானிடப் பிறவியின் தயாளமுள்ள அன்பு.

2. சீராட்டி போஷிக்கும் தாயின் அன்பு

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்

தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை.

(கொன்றை வேந்தன்.)

3. பராமரிக்கும் தகப்பனின் அன்பு.

தந்தை சொன்மிக்க மந்திரமில்லை.

(கொன்றை வேந்தன்.)

4. ஒற்றுமையைப் பழக்குகிற சர்வ வியாபகமான சகோதரத்துவ அன்பு.

(ஒற்றுமை பொருந்திய வாழ்க்கை பரஸ்பர இன்பத்தை விளைவிக்கும்)

5. நற்குண நற்செய்கையுடன் பேரறிவுள்ள கல்விப்பேறு.

(புகழை விளைவிக்கும்)

1, சரீர சிக்ஷையினால் பயம்.

2. அடக்கியாளும் தோற்றத்தினாலும் சொல்லினாலும் பயம்.

3. சட்டவிதிகளின் அதிகாரத்தால் பயம்.

4. வெறுக்கத்தக்கதும் குரூரமான மனோசார்பின் செய்கையால் பயம்.

பயம் சரீரத்தில் விஷமூட்டும் வன்மையுள்ளது. இரத்தத்தில் தேக அனாரோக்கியகரமுள்ள இரசாயன சம்மந்தமான மாறுதல்களைஉண்டாக்குகிறது. நல்ல செய்கைகளைச் செய்யவும் கெட்ட செய்கைகளை தவிர்க்கவும் வேண்டியதான மனோ தைர்யத்தை பெரும்பாலும் அடக்குகிறது.

1. தலையில் குட்டுதல், மண்டையில் அதிர்ச்சியுண்டாகி மூளை கலங்குகிறது.

2. கன்னத்தில் அறைவது, அசைவில் பொட்டில் பட்டால் மூர்ச்சை உண்டாகும்.

3. "Darwin's Theory" "கோலாட்ட குரங்காட" என்பதை அனுசரித்து பிரம்பால் அடிப்பது சதையை மென்மையிலிருந்து கடினமாக்கி ஆர்வமுள்ள தேக உணர்ச்சியை குறைக்கிறது அடங்காமையான துணிவையும் வெட்கமின்மையும் விர்த்தி செய்கிறது.

உபாத்தியாயருடைய உபயோகமுள்ள ஊக்கம் கோபங்கொள்வதினால் வீணாக இழந்து போகிறது. பிள்ளைகள் ஒருவருக்கொருவர் நேசிக்கவேண்டும் சண்டை சச்சரவு போடாமலிருக்க வேண்டும். நன்மை செய்கிறவர்களிடத்தில் நன்றி பாராட்ட வேண்டும். பிள்ளைகளுடைய வணக்கமும் மகிழச் செய்யும், நடத்தையும் பெற்றோர்கள், உபாத்தியாயர்கள் மற்றோர்களுடைய அன்பை உண்டுபண்ணி வளரச் செய்கிறது.

வீட்டு வேலையின் ஒவ்வொரு வகையையும் குடும்பஸ்தர்களில் ஒவ்வொருவரும் கௌரவம் அகௌரவம் என்ற வித்தியாசம் பாராட்டாமல் சுறுசுறுப்பை கைக்கொண்டு மனமொப்பிச் செய்ய வேண்டும்.

கல்விக்குச் சாதகங்கள் :— நல்லவம்ச உரிமை, தேக ஆரோக்கியம், காலத்தை நன்றாய் உபயோகித்தல், சுறுசுறுப்பு, விடாமுயற்சி, ஆழ்ந்த ஆலோஜனை, பணிவு, நற்குண நற்செய்கை, சொற்ப செல்வம், உற்சாகம்.

கல்விக்கு பாதகங்கள் :— கெட்ட வம்ச உரிமை. தேக அனாரோக்கியம், காலத்தை வீண்போக்குதல், சோம்பல், முயற்சியின்மை, ஆழ்ந்த ஆலோசனையின்மை, பணியாமை, துர்குண துர்ச்செய்கை, பெருஞ் செல்வம், உற்சாகமின்மை, அமிதமான சீராட்டலை அடைதல்.

எல்லா மதங்களின் கொள்கை ''உயிர்க்கொருதுணை யெனச்சிறந்த நேர்மையான தூய்மை வாய்மையே, சத்தியமே தர்மம், தர்மமே ஜயம்'' என்பதை வற்புறுத்துகிறது.

தெளிவாகவும் பூர்ணமாகவும் பிரகாசிக்கும் தன்மை நெடுங்காலமாவதானாலும் ஒரு கூட்டத்தின் மன ஊக்கத்தைக்காணும் இடம் பள்ளிக்கூடமே.

சர்வ சிருஷ்டிகளுக்கும் மூலாதாரமாய்சர்வ சக்தியும் சர்வ வியாபகத்துவமும் சர்வஞ்ஞத்துவமுமுள்ள கடவுளை போற்றி வாழ்க.

## [illegible]. முற்காலத்தியவும், தற்காலத்தியவும், கல்வி பயிற்சி.

உலகெலா முணர்ந்தோ தற்கரியவ
னிலவுலாவிய நீர்மலிவேணிய
னலகில் சோதிய னம்பலத்தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

முதலாம்முறை வாசித்தல் தெளிவு தோன்றாத போதம் தரும்.

இரண்டாம்முறை வாசித்தல் விசிதமான தெளிவு தோன்றிய போதம் தரும்.

மூன்றும்முறை வாசித்தல் பரிபூர்ணமுள்ள அறிவும் பிறர்க்கு உரைக்கும் தெளிவும் திறமையும் தரும்.

மெதுவாகப் படித்தல் கல்விக்குள்ள அழகுகளையும் பெருந்தன்மைகளையும் கவனிக்கச்செய்து கற்றகல்வியை விளக்கம் செய்யும்படியான புகழை தரும்.

சபைக்கோழை யின்மையான வன்மை வாய்ச்சொல்லே கற்றறிவின் விளக்கமாகும்.

அறிவு பலவகைப்படும்.

1. வாயால் படித்தல்—கல்வியறிவு.
2. காதால் கேட்டல்—கேள்வியறிவு.
3. கண்ணால் பார்த்தல்—காட்சியறிவு.
4. மெய்யால் உணர்தல்—உணர்ச்சியறிவு.
5. மூக்கினால் முகருதல்—மணத்தின் அறிவு.

கல்வி கேள்வி அறிவு மனிதனுக்கு மதியீனத்தை தவிர்த்து மன உறுதி தரும். ஸ்திரீக்கு மனசலனத்தை தவிர்த்து மனஉறுதிதரும். மனிதனுடைய முதல் சிந்தனை அவசரத்தையும் மாறுபாட்டையும் அனுசரிக்கும். இரண்டாம் சிந்தனை தீர்க்கமாயும் திடமாயும் இருக்கும். ஸ்திரீயினுடைய முதல் சிந்தனை கபடமற்றது. இரண்டாம் சிந்தனை சலனமுள்ளது.

கொடிகள் சுற்றுப்பக்கங்களிலுள்ள மரஞ்செடிகளில் இயற்கையாக விரைந்து தாவுதல் போல மனிதனுடைய இயற்கை சுபாவம் பக்கத்திலுள்ள நற்சகவாசத்தையோ துர்ச்சகவாசத்தையோ விரைவில் பற்றுதல் இயல்பாகும். இளமைப் பருவமுள்ளவர்களுக்கு அந்த இயற்கை பதின்மடங்காகும்.

மாணுக்கர்களுடைய மூளையின் சுபாவம்—கூர்மையோ, மந்தமோ தெய்வத்தின் அருளால் மானீடசரீரம் உண்டாகும்போதே புகட்டியிருக்கிறது.

அன்னமாவே மண்ணொடு கிளியே
இலவிக்குடம் ஆடு எருமை நெய்யரி
யன்னர் தலை இடை கடைமாணுக்கர்.
களி மடி மானி காமிகள்வன்
பிணியனேழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற்கஞ்சித்
தடுமாறுளத்தன் தறுகண்ணன் பாவி
படிறன் இன்னோர்க்குப் பகரார் நூலே. (நன்னூல்)

ஒருமைக்கண் தான் கற்றகல்வி யொருவற்
கெழுமையும் ஏமாப்புடைத்து (திருக்குறள்)

வினைகள்போல் உயிரின்கண் கிடந்துகல்வி அதுபுக்குழி புகுமாகலின் எழு பிறப்பினுஞ்சென்று உதவுதலை உடைத்து என்றூர்.

முன் ஜன்மங்களில் கற்றகல்வி எதுவரையில் தொடர்கிறதோ அது வரையில் ஒரேதரம் வாசித்தமாத்திரத்தில் ஏகசந்திர கிராஹியாக சிலர் ஆகிறூர்கள். நல்லமுன்னேற்ற மடைகிறூர்கள். பிறகு விடாமுயற்சி யின்மையால் பின்னேற்ற மடைகிறூர்கள்.

முன் ஜன்மங்களில் கல்விப்பேறில்லாதவர்கள் விடாமுயற்சியாலே பலதடவை கற்று முன்னேற்ற மடைகிறூர்கள்.

முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்.
சோம்பரென்பவர் தேம்பித்திரிவர். (கொன்றைவேந்தன்)

தேகம்வளரவளர அதற்கொத்த பரிமாணமாக மூளையும் வளர்ச்சியடையும், ஊகமாய் பார்க்கிறசக்தியும், ஊகமாய் கேட்கிற சக்தியும், ஊகமாய் கவனிக்கிற சக்தியும், சுவய ஆலோசனை சக்தியும் நன்ருய் தெரிவிக்கும் சக்தியும், விர்த்தியடைவது மூளையின் வளர்ச்சியைச் சார்ந்தது.

பிரதிவருஷத்திய, 1. இளவேனிற் பருவம், 2. முதுவேனிற் பருவம், 3. மாரிபருவம், 4. குளிர்பருவம், 5. முன்பனி பருவம், 6. பின்பனி பருவம், இவ்வாறும் ஒன்றன்பின் ஒன்ருகத்தொடர விதித்திருப்பதுபோல.

ஆயுளில், 1, குழந்தைப்பருவம்–அழகுகளைப் பார்த்து உவக்கும் மனோபாவம்.

2. இளமைப்பருவம்–கவலையற்று சந்தோஷசரமுள்ள மனோபாவம். (கல்விப்பேறடையத்தக்ககாலம்)

3. நல்லபிராயப்பருவம்—தேவலோக இன்பங்களாக, பூலோகஇன்பங்களை எண்ணிநுகரும் தேகதிடமும் மனோதிடமும் உள்ள மனோபாவம்.

4. முதுமைப்பருவம்—தேகசக்தி குறைதல், ஞாபகசக்தி குறைதல் மனோதிடம் குறைதல், முகவசீகரம் குறைதல் இவைகளை நினைந்து மனந்தளர்ந்து சோர்ந்து ஒன்றையும் கவனிக்காது அசட்டை செய்யும் மனோபாவம்.

இவைகள் விதித்தகாலத்தில் தவிர்க்கமுடியாமல் தொடரும்., பிணியி ஞல் பீடிக்கப்பட்டால் முதுமைப்பருவத்தின் தன்மைகள் முன்ஞடியே வந்தெய்தும். அமரபட்சத்து சந்திரன் கலைகுறை வதுபோல தேகதிடமும் மனேதிடமும் ஞாபகசக்தியும் முதுமைப்பருவத்தில் குறைவு அடையும்.

'கண் கண்டது கை செய்யும்' என்பது மூளையின் புத்தி கூர்மை யுள்ளவர்கள் தாஞக செய்வார்களென்றதை அனுசரித்துச் சொல்லியது. புத்தி மந்த சுபாவமுள்ளவர்கள் பிறர் செய்கையினுடையவும் சொல்லினு டையவும் உதவுதலாலும் ஏவுவதலாலும் செய்வார்கள் விடாமுயற்சியும் உதவும்.

பாரம் சுமக்கவும் வண்டி இழுக்கவும் என்று காளைமாடுகள் ஏற்பட்டி ருந்தாலும் காளைப்பருவம் வருமுன்னதாக கன்றுகளை கன்றின் இளம் பருவத்தில் சிறு சிறு பாரங்களாக வைத்துச் சுமற்றி பாரம் சுமக்கவும் சிறு சிறு வண்டிகளைக் கொண்டு வண்டி இழுக்கவும் தற்பித்துப் பண்ணு கிறதில்லை. காளைப் பருவத்தில்தான் பாரம் சுமக்கவும் வண்டி இழுக்கவும் பழக்கம் செய்கிருர்கள். அதுபோல தேக வளர்ச்சியையும் வயது பருவத் தையும் ஒட்டி மூளை சரியான வளர்ச்சியடையு முன்னதாக இளமைப் பருவத்தில் கல்வியில் ஊக்கமாய் பார்க்கிற சக்தியும் ஊக்கமாய் கேட்கிற சக்தியும் ஊக்கமாய்க் கவனிக்கிற சக்தியும் சுவய ஆலோசனை சக்தியும் நன்ருய் தெரிவிக்கும் சக்தியும் பையன்களிடத்தில் எதிர் பார்க்கக் கூடி யதல்ல. அப்பருவம் சொன்னதைச்சொல்லும் கிளிப்பிள்ளை போல உபாத் தியாயர்கள் போதித்ததைச் சொல்லும் பருவம். அக்காலம் அப்படி எதிர் பார்க்கும் கல்வி சரியான எதிர் மாறில்லாமலும் மூளைக்குச் சரியான வளர் ச்சி கொடாமலும் பலஹீனத்தை உண்டுபண்ணும். தாழ்ந்த வகுப்புகளில் உபாத்தியாயர் சொல்வதை மனப் பாடம் பண்ணுவதே உசிதமாகும். தேக வளர்ச்சியுடன் மூளை வளர்ச்சியாகும் வயதுக் கிரமத்தில் மேற்சொ ல்லிய மூளையின் சக்திகளை முதல் பாரத்திலிருந்து எதிர்பார்க்கவும் அபிவி ருத்திக்கவும் கூடும்.

கடவுளால் அருளிய ஒரே அறிவும் இயற்கை யுணர்விஞல் பேர் பெற்ற ஒரே நல்ல சுபாவம் ஒவ்வொரு பிராணிக்குமுண்டு.

| | | |
|---|---|---|
| ஆண் கோழி | —— | விடியற்சாமத்தில் கூவுதல் |
| காக்கை | —— | விடியற்காலம் கத்துதல் |
| கிளி | —— | சொன்னதைச் சொல்லுதல் |
| பசுமாடு | —— | சாதுத் தன்மை |
| நாய் | —— | விசுவாசம் |
| நரி | —— | தந்திரம் |
| குதிரை | —— | வேகம் |

கழுதை —— பொறுமை
யானை —— பலம்
புலி —— உக்கிரம்
சிங்கம் —— பெருந்தன்மை
நல்லபாம்பு —— ரோஸம்
அன்னம் நீரைப் பிரித்து பாலுண்ணுதல்
பிராணிகள் —— தண்ணீரில் நீந்துதல்
பறவைகள் —— ஆகாயத்தில் பறக்குதல்

அதேவிதமாக ஒரு கெட்ட சுபாவமும் ஒவ்வொரு பிராணிக்கும் உண்டு. பிராணிகளின் ஸ்வரமும் அவ்விதமே.

மயில் கூவுதல் —— ஷட்ஜஸ்வரம்
மாடு —— ரிஷபஸ்வரம்
ஆடு —— காந்தாரஸ்வரம்
அன்றில் பறவை —— மத்யஸ்வரம்
குயில் —— பஞ்சமஸ்வரம்
குதிரை கனைத்தல் —— தைவதஸ்வரம்
யானை முழக்கம் —— நிஷாதஸ்வரம்

மனிதனுக்கோ கடவுள் அருளினால் பெற்றது பகுத்தறிவு. ஒரு குணமும்நிர்ணயிக்கவில்லை. தனக்கோ பிறருக்கோ உபயோகமாக ஒவ்வொரு குணமும் பழக்கத்தினால் அடையவேண்டி யிருக்கிறது. மனிதன் நாளடைவில் பிராணிகளை தனக்கு உபயோகமாக பழக்கிக்கொள்ளுகிறான்.

| | |
|---|---|
| Children thumb it (book)<br>Boys read it<br>Men understand it<br>Old folks commend it | Psychological principles for mind and brain and Hygienic principles for body. |

மனக்கிளர்ச்சி மூளைக்கிளர்ச்சிக்கு மனோவிர்த்தி நூல் விதிகளை அனுசரிக்கவேண்டும். தேக ஆரோக்கியத்திற்கும் சுகாதாரநூல் விதிகளை அனுசரிக்கவேண்டும். Laws of Nature படைப்பினுடைய பிரபஞ்ச அமைப்புக்குள்ள விதிகளை மீறி நடந்தால் தவிராமல் வியாதி யுண்டாகி ஆயுளைக் குறைக்கும். பொருள் நஷ்டமும் துன்ப அனுபவமும் தீராது.

Laws of man ஜனசங்கவிதிகளை மீறிநடந்தால் திரவிய நஷ்டமாகிய அபராதமும் சரீர அசௌக்கியமான காவலும் விதித்தலாகும் அவைகளை தவிர்க்கவும் முடியும்.

கவனிக்குமளவில் பொதுவாகவே மாணுக்கர்கள் வயதுக்குத் தக்க போதுமான தேகவளர்ச்சியில்லே குறைந்த தேகபோஷணக், குறைவும் கல்வியின் பாரம் அதிகமாயிருப்பதை பொறுக்கமுடியாமையும்தான் காரணமாகும்.

முற்காலத்தில் பாடங்களே மனப்பாடம் பண்ணச்சொன்ஞர்கள். பொட்டை உருவாஞலும் அர்த்தம் தெரிந்த உருவாஞலும் அந்த மனப் பாடம் ஞாபக சக்தியை வளர்த்தது செய்யுள் மனப்பாடம் வசன மனப் பாடத்தைப் பார்க்கிலும் சுலபமாக ஞாபக சக்தியை வளர்க்கும். பால்யத் தில் செய்த மனப்பாடம் தேக திடத்தை அனுசரித்து வயது முதிரும் பருவத்திலும் அதை ஞாபகத்துடன் தெரிவிக்க உதவும். கல்வியை பள் ளிக்கூடத்தை விட்டபோதே செலவுகொடுத்து அனுப்பாமல் Standard works நல்ல ஆசிரியர்களின் திட்டமான புஸ்தகங்களே படித்து வருவ தும் தீமைவிளேயனவும் வெறுப்பானவுமான கட்டுக்கதை புஸ்தகங்களே ஆவலுடன் படிக்காமல் தவிர்ப்பதும் தேக ஆரோக்கிய விதிகளே மீறி நடக் காததும்தான் வயது காலத்தில் தேகதிடத்துக்கும் மனேதிடத்துக்கும் ஞாபகசக்திக்கும் இடமாகும். கண் திறந்திருந்தாலும் அதிர்ஷ்ட ஈன முள்ள கண்ணில்லாக் குருடரைப்போலல்லாமல் சுற்று முற்றுள்ள விஷ யங்களே ஆவலோடு உற்று லக்ஷித்து கவனித்தலும் முக்கியமாகும்.

முன்காலத்தில் முழுஎண்களுடையவும் பின்ன எண்களுடையவும் தசாம்சபின்ன எண்களுடையவும் கூட்டல் கழித்தல் பெருக்கல் வகுத்தல் உத்தமபொது அளவு அதமபொது அளவு உள்பட முற்றிலும் சந்தேகமில் லாத தேர்ச்சியை அடைவித்து Solution of Problems அனுபவ சம்ப ந்தமான கணக்குகளே கற்பிப்பது வழக்கம். இலக்கம் எண்சுவடி கற்பிக்கப் பட்டது. அதிஞல் மனக்கணக்குகளின் விடைசொல்வது வெகுசுலபம்.

தற்காலம் மூளேயை மேற்சொன்ன சக்திகளே ஆரம்பம் முதல் பழக்க வேண்டி 1 எண்வரிசை, 2 எண்வரிசை, 3 எண்வரிசை வகையரா முறையாக ஒவ்வொருவகுப்புக்கும் வரிசை வரிசையாக அனேகபற்பல புஸ்தகங்களே அனுபவ கணக்குகளுடன் அனேக ஆசிரியர்கள் பிரசுரம் செய்திருக்கிருர்கள். அனுபவகணக்குகளில் பால்யர்களுக்கு உபயோகிக்க வேண்டியது. கூட்டலா, கழித்தலா, பெருக்கலா, வகுத்தலா, என்று மிக்க சந்தேகம் உண்டாகிறது. வயதுஅதிகமாக—அந்த சந்தேகம் மூளே த்தேர்ச்சியுடன் நீங்குகிறது.

5 படிகட்டுகள் கட்ட,

முதல்படிகட்டில் 1-வது கல்வைத்து அதின்மேல் 2-வது படிகட்டில் 1-வது கல்வைத்து அதின்மேல் 3-வது படிகட்டில் 1-வது கல்வைத்து அதின்மேல் 4-வது படிகட்டில் 1-வது கல்வைத்து அதின்மேல் 5-வது படிகட்டில் 1-வது கல்வைத்தும்.

அதேமாதிரியாக 2-வது கல்லைவைப்பதும், அதேமாதிரியாக 3-வது கல்லைவைப்பதும் அதேமாதிரியாக 4-வது கல்லைவைப்பதும் அதேமாதிரியாக 5-வது கல்லைவைப்பதும், ஒவ்வொரு கல்லாக உயர்த்தி 5 படிகட்டுகள் கட்டுவது போலிருக்கிறது.

முதல் படிகட்டு எல்லாகற்களையும் கட்டி பிறகு 2-ம் படிகட்டு எல்லா கற்களையும் கட்டி அதேமாதிரியாக 5 படிக்கட்டுகளையும் கட்டுவது முன் சொன்னதைப் பார்க்கிலும் சுலபமும் திடமும் அல்லவா ?

அதுபோல கூட்டல் கழித்தல் பெருக்கல் வகுத்தல் சந்தேகமற ஒவ்வொன்றும் பூராவாக கற்பித்து கடைசியாக அனுபவகணக்குகள் கற்பிப்பது சுலபமல்லவா ?

கணிதசாஸ்திரம் முழுவதும் ஒரேபுஸ்தகமாக 1-வது ஸடாண்டர்டு முதல் 6வது பாரம் வரைக்கும் அல்லது 3வது பாரம் வரைக்கும் இருப்பது நலமல்லவா?

6-வது கிளாஸ் (Matriculation Class) வரைக்கும் உபயோகமுள்ளதாக கணிதசாஸ்திரத்தை ஒரேபுஸ்தகத்தில் அனேக அத்தியாயங்களாக ஒவ்வொரு வகையும் பூர்ணமாக இங்கலீஷில் Barnard Smith's Arithmetic (இங்கிலீஸ் நாணயங்கள் நிறைகள்) தமிழில் Colonso's Arithmetic (இந்திய நாணயங்கள் நிறைகள்) புஸ்தகம் ஏற்பட்டிருந்தன.

Problems in Arithmetic. Solutions in Arithmetic Devasahayam's Arithmetic, Radhakrishna Iyer's Arithmetic வகையரா மாறிமாறி வைக்கப்படுகிறது,

முன்காலத்தில் ஒவ்வொரு வகுப்புக்கும் ஒவ்வொரு விஷயத்துக்கும் ஒரு ஆசிரியருடைய புஸ்தகம் ஏற்பட்டிருந்து பரீக்ஷை தவறின பையன்களுக்கு பழயபுஸ்தகங்களை திருத்தமாய் படிக்க சுலபம் ஏற்பட்டு பரீக்ஷையில் தேறுவதாயிற்று Matriculation பரீக்ஷைக்கு பாஷா Texts புஸ்தகங்கள் வருஷாவருஷம் புதிதாக ஏற்பட்டதே தவிர மற்றவிஷயங்களில் Texts வேறு செய்யவில்லை அதுபோலவே F. A. B. A. பரீக்ஷைகளுக்கும் இருந்தது Public பரீக்ஷை தவறினல் பணமுட்டுப்பாட்டினல் படிப்பை நிறுத்தினவர்கள் தவிர மற்ற மாணக்கர்கள் விடாமுயற்சியால் அனேகவருஷங்கள் படித்த புஸ்தகங்களை திரும்பி திருத்தமாய் படித்து கடைசியாக தேறி ஜீவனோபாயத்தில் ஏற்றமடைந்திருக்கிறார்கள். அதே புஸ்தகங்களை பிரதி வருஷம் அந்தவகுப்புகளுக்கு போதிக்கவும் உபாத்தியாயர்களுக்கும் சுலபம்.

பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் அடிக்கடி நூதனவெவ்வேறு புஸ்தகங்களை வாங்க ஏதுவில்லாமல் பொருட்செலவும் ஜாஸ்தியாகவில்லை. 4, 5 பிள்ளைகள் ஒரு பெற்றோர்க்கு இருந்தால் ஒரு தரம் வாங்கின புஸ்தகத்தையே ஜாக்கிருதையாய் ஒவ்வொரு பிள்ளையும் வைத்தும் ஒட்டியும் எடுபோகாமல் பத்திரம் செய்வது வழக்கம். என் கையில் இருக்கும் "Barnard Smith's Arithmetic" உதாரணமான சாக்ஷியாகும். புத்தகங்களுக்கு விரிவான விளக்கம் போட்டவர்கள் சிறுபான்மையோர். மிக்க கடினமான பாகங்கள் விஷயங்கள் மாத்திரம் விளக்கியிருக்கும். (உதாரணமாக John Bradshaw's notes on Milton'.) அதனால் Texts ஐ நன்ருக திரும்ப திரும்ப படித்தும் அகராதி உதவியினுலும் விடாமுயற்சியினுலும் சுலபமாய் தெரிந்துகொண்டும் பாஷாபிவிர்த்தி செய்ய ஏதப்பட்டது உபாத்தியாயர்களின் போதனையை மாணுக்கர்கள் சரியாக கவனிக்கவும் ஏற்பட்டது. தற்காலம் Text Books ஐ தெளிவடையும் வரையில் திரும்ப திரும்ப படிக்கவும் அகராதியைப்பார்க்கும் சிரமமில்லாமலும் விடாமுயற்சிக்கு ஏதுவில்லாமலும் உபாத்தியாயர் போதனையை கோருமலும் கவனியாமலும் இருக்க விரிவான விளக்கங்களை Texts-ன் இலகுவான பாகம் கடினமானபாகம் என்ற வேறுபாடில்லாமல் உணவுக்கு தோல் உரித்த வாழைப்பழம் விற்ருல் போல விளக்கப்புஸ்தகங்களை பிரசுரஞ் செய்கிற ஆசிரியர்கள் பெரும்பான்மையோர் (உதாரணமாக Barrow & Maddox notes Sheppard's notes, Venkatasubbarow's Made Easy series) உளர். மாணுக்கர்கள் முன்காலத்தை விட தற்காலத்தில் பாஷாபிவிருத்தியில் பின்னேற்றமடைவதும் விடாமுயற்சியை விட்டு சோம்பலைக் கைக் கொள்வதும் மனேதிடமில்லாததும் ஏற்பட்டிருக்கிறது.

விளக்க புஸ்தகங்களால் உபாத்தியாயர்கள் முயற்சியும் குன்றியது. விளக்க புஸ்தகங்கள் வாங்கியதால் உபாத்தியாயர்கள் போதனை செய்வதில் கவனக்குறைவு ஏற்பட்டு விளக்கப்புஸ்தகங்களை சாவகாசமாய் பார்த்துக் கொள்வோமென்று மாணுக்கர்களுக்கு மனே திடமேற்படுகிறது.

அகராதிகளைப்பார்த்து பதங்களுக்கு சந்தர்பத்திற்கேற்ற பிரதிபதங்களை பொருக்கி எடுக்கும் சக்தியும் முக்கிய இலக்கிய இலக்கணங்களின் விசேஷங்களை யோஜித்து அறியும் சக்தியும் குன்றியது. Cinema சினிமா படங்களின் தோற்றத்தில் மனதிற் பதியும் விஷயங்களுக்கும் நாடகம் ஆடுபவர்களின் செய்கைகளின் தோற்றத்தில் மனதிற் பதியும் விஷயங்களுக்கும் எவ்வளவு வித்தியாசமோ அவ்வளவு வித்தியாசம் விளக்க புஸ்தகங்களினுல் பையன்களுக்குண்டாகும் அறிவுக்கும் உபாத்தியாயர் முயற்சித்து புத்தகசாலையில் தகவல் புஸ்தகங்களை பார்த்து பாடங்களை தயாரித்து போதிக்கும் அறிவுக்கும் இருக்கிறது. பொதுவாக,

பிரேகரணமான மூலபுஸ்தகங்கள், புராதன செய்யுள் வசனம் காவியங்கள் சன்மார்க்கபோதனக்கதைகளில் உள்ள விவரங்கள் விஷயங்கள் வேறுபாடு அடையவில்லை. ஆனால் ஆராய்ச்சிக்கும் காலத்திற்கும் தகுந்தவாறும் Nature ன் மாறுதலை சார்ந்தும் Science, Arts புஸ்தகங்களில் சில விஷயங்கள் மாறுபட வேண்டியிருக்கிறது அனுபந்த சேர்க்கை, திருத்தம் (Addenda. corrigenda) விவரமான மறுபதிப்பு Enlarged Revised edition) ஏற்படலாம். என்னிடமுள்ள கெவர்ண்மெண்டு புஸ்தகம் பதிப்பு (Moore's Manual of Family Medicine) உதாரணமாகும், 1st Edition 1872 8th Edition 1916. ஆகையால் வெவ்வேறு ஆசிரியர்களின் மதிப்பு புஸ்தகங்களை அனுமானிக்க அவசியமில்லை.

சில கல்வி இலாகா அபீசர்கள் பாலசிக்ஷை புஸ்தங்கள் பிரசுரித்தனர். அதற்கு மேல் வாசக புஸ்தகங்களை, பிரசுரிக்கவில்லை. அது குழந்தைகளை தவழக் கற்றுக்கொடுத்து நடக்க கற்க எதுவில்லாததை ஒக்கும். தேசங்கள் வெவ்வேறு. பாஷைகள் வெவ்வேறு. நடவடிக்கைகள் வெவ்வேறு. அது போல ஆசிரியர்கள் வெவ்வேறு மூலப் புத்தகங்கள் வெவ்வேறான வார்த்தைகள் உள்ளனவாய் பல. அவைகளுக்கு விரிவுரை விளக்கங்கள் பல. அவைகளை விற்கவும் வாங்கவும் அனுமானிக்கும் உபாத்தியார்களும் புத்தக வியாபாரிகளும் பல, இவைகள் கைப்பொருளை வற்ற வைக்கும் வழிகளாயின. புத்தகங்கள் மாறுதல் இல்லாமல் எல்லா வகுப்புகளுக்கும் பொது நியாய ஆதாரமாக தகுந்த மூலபுத்தகங்கள் வழங்குதல் உன்னதமாயும் உவப்பாயும் பொருட்செலவை மட்டுப்படுத்தி பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இனிதாயிருக்கும். General syllabus பொதுவான விஷய அட்டவணை ஏற்படுத்தி Texts, ஏற்படாததால் மேற்சொன்னபடி உபாத்தியாயர்கள் புத்தக மாறுதல் செய்ய துணையாயிற்று. பள்ளிக்கூட புத்தகசாலையில் தகவலுக்கு உபயோகமாக அநேக ஆசிரியர்களுடைய பதிப்புகள் வைத்து உபாத்தியாயர்கள் அவைகளை தகவல்பார்த்து சரிவா போதித்தால் அனேகமாக அப்புஸ்தகங்களை பையன்கள் வாங்க நிமித்தமில்லை முன்காலத்தில் படிப்பின்செலவும் அதிக மில்லை. பின்வரும் ஜீவனோபாய சம்பாத்தியம் அதிக மென்று தோற்றி படிப்பை விரும்பி படித்தார்கள். அந்த ஜீவனோபாயத்துக்கு ஊடுருவும் போட்டியில்லை. அக்காலத்தில் சம்பாத்தியம் பெருகிற்று. தற்காலமோ படிப்பின் செலவும் அதிகம். அவ்வித ஜீவனோபாய சம்பாத்தியமோ குறுகிற்று என்ற தோற்றம். போட்டியோ அதிகம். பெற்றோர்கள் பையன்களுடைய சம்பாத்தியத்தை எதிர்பார்த்தே படிக்க வைக்கிறார்கள். அறிவு ஞானம் வளர்ச்சிக்கென்றே படிக்கவைக்கிறதில்லை அறிவு ஞானம் விர்த்திக்காக என்று கல்வி கற்க வேண்டியதானாலும் கல்வியை ஜீவனோபாயத்துக்காகவே கோருகிறார்கள்.

முன்காலத்தில் பெற்றோர்களும் பிள்ளைகளும் திடகாத்திர முள்ளவர்களா யிருந்தார்கள். இப்போது வயதுக்குதகுந்த திடகாத்திரமில்லை. அதற்கேற்ற காலத்தில் முதுமைப்பருவத்திய தன்மைகள் அடையாமல் முன்னடியே அவைகளை அடைகிறார்கள். சரிவர போஷணை யில்லாததும் தேகாரோக்கிய விதிகளை அனுசரிக்காததும்தான் காரணமாகும் முன்காலம் கோட்பாடு விதிகளைப் போதித்து மனப்பாடம் செய்வித்து உதாரணங்களையும் போதித்தார்கள். படங்களையும், சித்திரங்களையும், பலகையில் வரைந்து அந்த விதிகளுக்கு உதாரணங்கள் கூறினார்கள்.

தற்காலம் மனப்பாடம் பண்ணுவது பிசகானது என்று கோட்பாடு விதிகளை மனப்பாடம் செய்விக்காமல் சாதனை பயிற்சி என்று பயிற்றுவித்து பிறகு அதிலிருந்து கோட்பாடு விதிகளை தெரிந்து கொள்ளும்படி செய்கிறார்கள்.

## கோட்பாடு விதியைத் தெரிந்து கொள்ளாமல் சாதனைபயிற்சி.

வண்டியை இழுக்க குதிரையை முன்னடி கட்டி இழுக்கவேணும் என்று சரியாகச் செய்யவல்ல கோட்பாடு விதியை முன்னடி போதிக்காமல் குதிரையை பின்னடியோ பக்கத்திலோ கட்டி வண்டி இழுக்க முடியாததை பார்த்து தெரிந்தபிறகு குதிரையை முன்னால் கட்டி இழுப்பது ஒரு வகை சாதனை பயிற்சியின்மேல் கோட்பாடு விதியை தெரிதல்.

## கோட்பாடு விதியைத் தெரிந்து சாதனை பயிற்சி.

சித்திரங்களையும் படங்களையும் பலகையில் வரைதலையும் பார்த்து வண்டி இழுப்பதான கோட்பாடு விதியைத் தெரிந்து சாதனைபயிற்சியின் சுலபமுள்ள வழியை (குதிரையைமுன்னால் கட்டி வண்டி இழுப்பது) தெரிந்துகொள்ளுதல்.

கோட்பாடுகளை மனப்பாடம் செய்தல் பொன்னாலாகிய மலரையும் சாதனை பயிற்சி மலரின் நறுமணத்தையும் ஒக்கும். முற்காலம் திண்ணைப்பள்ளிக்கூடங்களில் உபாத்தியாயர்கள் ஒரு பாஷையில் கல்வி தேர்ச்சியடைந்தவர்களே மாணாக்கர்களுடைய சுபாவத்துக்கு தக்கபடி ஒரே புஸ்தகத்தை பலருக்கு ஆரம்பித்தாலும் அதிக புத்திசாலி யுள்ளவனுக்கு ஒரு புஸ்தகம் முடிந்தவுடன் வேறொரு புஸ்தகம் ஆரம்பித்து கற்பிப்பதுண்டு பிரதம கல்வியை சிலமாணாக்கர்கள் 2 வருஷத்திலும் 3 வருஷத்திலும் 4 வருஷத்திலுமாக முடிப்பார்கள் ஒரு மாணாக்கனுடைய புத்திமந்தத்துக்காக மற்றொரு மாணாக்கன் வேறு புதிய புஸ்தகம் ஆரம்பிக்காமல் இருக்கிறதில்லை. படிப்பு கிரமமாக 7 வயதிலும். ஆரம்பிக்கலாம் இப்போது புத்திமந்தமோ கூர்மையோ 1-முதல் 5வது கிளாஸ் வரையில் கட்டாயமாக 5 வருஷம் போக்க வேண்டியிருக்கிறது. திண்ணைப்பள்ளிக்கூடங்

களில் சிக்ஷிப்பது வெகுக் கொடுமை யென்பது ஒரு பக்ஷபாதநோக்கம். பெற்றோர்கள் அந்தஸ்துக்கும் பையன்களுடைய சுபாவத்துக்கும் தகுந்த மாதிரிதான் சிக்ஷை விதித்தார்கள். அந்த உபாத்தியாயர்களுடைய கல்வி தேர்ச்சியும் மாணாக்கர்களின் கல்விதேர்ச்சியும் புகழத்தக்கதே. திண்ணைபள்ளிக்கூடங்களில் படித்தவர்களில் பலர் நல்ல முன்னேற்ற மடைந்திருக்கிறார்கள்.

பிள்ளைகளுக்கு எவ்வளவுக் கெவ்வளவு முன்னாடி பெற்றோர்கள் அதிக இடங்கொடுத்து அன்பை வீணாகச்செலவழிக்கிறார்களோ அவ்வளவுக் கவ்வளவு பின்னாடி அந்த இடங்கொடுத்தலினாலுண்டான கெடுதிகளை நிவர்த்திக்கவும் ஒழுங்கான திருத்தத்துக்கும் பழக்கத்துக்கும் கொண்டுவரவும் கடுமையான சிக்ஷை விதிக்க வேண்டியிருக்கிறது. (இளஞ்செடிதான் வளையும்.) அன்பாய்நடத்துவதற்கும் கடுமையாய் நடத்துவதற்கும் ஒரு கிரமமான வரையறை எக்காலத்திலும் உண்டு. பெரும்பான்மை நயபயத்தினால் போதித்தார்கள்.

## இங்கிலீஷ் பாஷை.

உயிர் எழுத்து 5. a e i o u

மெய்யெழுத்து. 19 b c d &c.

உயிரெழுத்தாகவும் }
மெய்யெழுத்தாகவும் } 2. w. y. Window Young boy

26

ஒரே எழுத்து குறுகியும் நெடுகியும் உச்சரிப்புள்ளது But, Put,
அ உ

மெய்யெழுத்து, உயிரெழுத்து சம்மந்தத்தால் தான் உச்சரிப்புள்ளது

ஒரு வார்த்தையில் சில எழுத்துகளுக்கு உச்சரிப்பு இல்லை Rendezvous (Rendavo உச்சரிப்பு) hour. அனேக வார்த்தைகளுக்கு இதர பாஷைகளின் வார்த்தைகள் மூலபதம். எழுத்துக் கூட்டலும் உச்சரிப்பும் தனிமையாக கற்றல் வேண்டும் அகராதியோ அனேக சம்புடங்களடங்கிய வார்த்தைகள். இலக்கணமோ வசனம். விதிகள் வகுப்புகள் அனேகம் விலக்கு விதிகள் அனேகம்.

## இந்திய பாஷைகள்.

தமிழ் பாஷை: (ஸமஸ்கிருதம், தெலுங்கு கன்னடம் மலையாளம் வகைரா பாஷைகள் இது போலவே.)

உயிர் எழுத்துகள் 12 தெரிந்தால்

மெய்யெழுத்துகள் 18 சுலபமாய் தெரியவரும்

பிறகு உயிர்மெய்யெழுத்து 18 சுலபமாய் தெரியவரும்

பிறகு ,, 198 ,,

ஆய்தவெழுத்து 1 (ஃ)

247

ஒவ்வொரு எழுத்துக்கும் ஒரே உச்சரிப்பு

வார்த்தையின் ஒவ்வொரு எழுத்துக்கும் உச்சரிப்பு உண்டு.

எழுத்துக்களைக் கூட்டி வார்த்தை உச்சரிப்பது மிகவும் சுலபம்.

அகராதியோ சுலபமாய் மனப்பாடம் பண்ணும்படியான (நிகண்டு) செய்யுள்.

இலக்கணமோ வகுப்புகள் சில, விலக்குகள் சில

சுலபமாய் மனப்பாடம் பண்ணும்படியான (நன்னூல்) செய்யுள்.

இலக்கணம் என்பது இலக்கியத்தின் இலட்சணம், வசனத்தைப்பார்க்கிலும் செய்யுள் இலகுவாய் மனப்பாடம் பண்ணலாம்.

இலக்கணம் நன்ருய் தெரிந்தால் பாஷையை சரிவர திருத்தமாக பேசுவதும், எழுதுவதும் மிகவும் சுலபம்.

வீட்டில் பேசிவரும் பாஷையானதால் அந்த பாஷையில் தேர்ச்சியடைவது மிக்க சுலபம்.

ஏதாவது ஒருபாஷையில் தேர்ச்சியான அறிவுண்டானுல் இதர பாஷையை சகவாசத்தினுலும் பழக்கத்தினுலும் சுலபமாய் பேசவும் எழுதவும் கற்கலாம்.

இங்கிலீஷ் பாஷையை கற்பிவிக்கும் விதத்தை அனுசரித்து இந்து தேச பாஷைகள் கற்பிவிக்கும் விதம் சுலபமல்ல. முதலில் ஆத்திச்சூடி வகையரா செய்யுள்புத்தகங்களை ஒவ்வொன்றும்பூரணமாக கற்பிக்கவேண்டும்

அனேக ஆசிரியர்கள் செய்த செய்யுள்களில் பொருக்கிய கோர்வையை கீழ் வகுப்புகளுக்கு முன் காலத்தில் போதிப்பதில்லை. ஒவ்வொரு புஸ்தகங்களில் செய்யுட்களை ஆரம்ப முதல் முடிவுவரையில் போதித்தார்கள். ஆசிரியர்களின் நற்கொள்கைள் முற்றிலும் பையன்களுக்கு புலப்பட்டும், அறிவு அதிகரித்தும் அதின்படி நடக்கவும், ஆதாரமாகும்.

## அற்ப அறிவு அபாயமான விஷயம்.

பொருக்கிய செய்யுள்கள் பிள்ளைகளுக்கு சொற்ப கல்வியை புகட்டும். அவைகள் ஒரு இடத்தில் நில்லாமல் ஓடி ஆடி வயிறு நிறையாமல் மேயும் ஆடுகள் தின்னும் இளந்தளிர்கள் போல்வன. ஒரு புஸ்தகத்தின் எல்லா செய்யுட்களோ அதிக கல்வியை புகட்டும், அவைகள் ஒரு இடத்தில் நின்று வயிறு நிறைய மேயும் மாடுகள் தின்னும் ஆகாரம் போல்வன. இது வசனங்களுக்கும் சரித்திரங்களுக்கும் ஒத்ததே

ஆலும் வேலும் பல்லுக்குறுதி

நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

ஆகார வஸ்துக்களை நன்ருய் மெல்லும்படியான உறுதியை ஆலங்குச்சியாலும் வேலங்குச்சியாலும் பல் விளக்குவதில் பல்லுக்கு உறுதியை தரு

வது போல நாலடியாரும் திருக்குறளும் கற்பது வாக்குக்கு சொல் வன்மையைத் தரும்.

முற்காலத்தில் ஆத்திச்சூடி வகையரா செய்யுள்களும் தமிழ்வசன புஸ்தகங்களும் கணக்குகளும் சென்னை இராஜதானி பூகோளமும் போதித்தார்கள். திண்ணைப் பள்ளிக்கூடத்தில் 3 வருஷம் தமிழ், தெலுங்கு சமஸ்கிருதம் படித்த பிறகு நன்னிலத்தில் Local Fund School-ல் 4 வது ஸ்டாண்டர்டில் படித்தேன் திருக்குறள் படித்தேன் சீர்காழி, மாயவரம் நன்னிலம் நாகப்பட்டணம் திருத்துரைப்பூண்டி தாலூகாக்கள் சேர்ந்த நாகப்பட்டணம் சர்க்கிள் டிப்டி இன்ஸ்பெக்டர் மகா-ா.ா.ஸ்ரீ R. சாமிநாதய்யர் அவர்களிடம் திருக்குறளை ஸ்கூல் பரிசாகப் பெற்றேன் ஜனவிநோதனி பத்திரிகை கதைகள் வகுப்பில் படிப்பதுண்டு. இதனால் முற்காலம் தமிழ்பாஷை போதனை இருந்த பரிமாணத்தை தெளிவாக அறிந்து கொள்ளலாம் இப்போதைய பரிமாணம் உங்களுக்குத் தெரிந்ததே. அதே காலத்தில் இங்கிலீஷில் Bangalore Ist Reader, Sequel Book I, II. Sandford & Merton, Chamber's Moral class Book சொந்த போதனையில் படித்தேன். முற்காலத்தில் 4 வது ஸ்டாண்டர்டுக்கு மேல் உயர்தர பள்ளிக்கூடங்கள் சமீபத்தில் கிடையாது. தூர இடங்களுக்கு அனுப்ப பெற்றோர்களுக்கு தைரியமில்லை.

பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் பையன்களுடைய மனோபாவம் தெரிந்து படிப்பு விஷயத்தில் மனக்கிளர்ச்சியையும் ஆவலையும் விடா முயற்சியையும் கைப்பற்ற தூண்டுதல் செய்வது பிள்ளைகளுடைய முன்னேற்றத்துக்கும் பெற்றோர்களுடைய மகிழ்ச்சிக்கும் பிரதானமானது.

எந்த வகுப்பிற்கு தகுதியுள்ளவர்களோ, எந்த வகுப்பில் சந்தோஷகரமாய் ஊக்கத்துடன் படித்து வருவார்களோ, அந்த வகுப்பில்தான் பையன்களைச் சேர்க்கவேண்டும்.

கிராமாந்திர வாழ்க்கையின் முன்னேற்றத்துக்கு அவசியமாகவுள்ள அமைப்புகளாவன:—

1 சரிவர நிர்வகித்து வருகிற பள்ளிக்கூடம்.

2 அதன் சமீப பக்கங்களில் சௌகரியமாய் இருக்க வேண்டியதான

a பற்பல நல்ல புஸ்தகங்களையும் உலக வர்த்தமான பத்திரிகைகளையும் சேகரித்து வைக்க ஒரு அறை

b, சகலரும் படிக்க விசாலமான வசதியுள்ள வெளிக்கட்டடம்.

c உல்லாச போக்குக்கு ஒரு விசால இடம்.

d நல்ல தண்ணீர்க்கிணறு.

ெ பலவகை காய் கறிகள், புஷ்பங்கள் நல்விளைவு உண்டாகி லா பமுள்ள விற்பனை தொகையை அடைய ஆதாரமாக ஒரு தோட்டம்.

## அனுபந்தம்.

### படிக்கவேண்டிய தமிழ் புஸ்தகங்கள்.

உலக நீதி
ஆத்திச்சூடி
கொன்றை வேந்தன்
வெற்றி வேற்கை
மூதுரை
நல் வழி
நன்னெறி
இனிது நாற்பது
இன்னா நாற்பது
களவெண்பா
அரிச்சந்திர புராணம்
அறநெறிச்சாரம்
நீதி நெறி விளக்கம்
பழமொழி

திரிகடுகம்
நான்மணிக்கடிகை
சிறுபஞ்ச மூலம்
நீதி வெண்பா.

முதுமொழிக்காஞ்சி
நிகண்டு
நன்னூல்
நாலடியார்
திருக்குறள்
பஞ்ச தந்திரம்
ஸ்ரீமத் இராமாயணம்
ஸ்ரீமத் மஹாபாரதம்
ஸ்ரீமத் பாகவதம்
பெரிய புராணம்
திருவிளையாடல் புராணம்
ஸ்தல புராணங்கள்
பக்தவிஜயம்
இவைகளின்
செய்யுள், வசன புஸ்தகங்கள்
தாயுமான சுவாமிகள் பாடல்

### படிக்க வேண்டிய சமஸ்கிருத புஸ்தகங்கள்.

ஸம்க்ஷேப இராமாயணம்.
ஸஹஸ்ர நாம ஸ்தோத்திரங்கள்.
நீதி சாஸ்திரம்
ஸ்ரீமத் இராமாயணம்
ஸ்ரீமத் மஹாபாரதம்
ஸ்ரீமத் பாகவதம்
போஜ சம்பு
இரகு வம்சம்

## IV

சுக்ர நீதி — அமரம்
பஞ்ச தந்திரம் — சப்தமஞ்சரி
போஜ சரித்திரம் — கௌமுதி

First Book & Second Book by
Ramakrishna Gopal Bhandarkar Bombay.

கடவுளைப் போற்றித் துணைக் கொள்வீராக.

### முக்கிய கவனிப்புகள்.

படுக்கையை விட்டு விடியற்காலத்தில் எழுந்திரு.
பற்களை நன்ருய் விளக்கு. (துலக்கு)
தேகத்தை சுத்தம் செய்.
சுத்தமான உடைகளைத் தரி.
பெரும்பான்மையாக சுத்தத்தை அனுசரி.
(சுத்தம் என்பதுதான், ஆசாரம், Sanitation.)
சுறுசுறுப்பாயிரு.
உண்மையே பேசு.
(புறத்தூய்மை—தண்ணீரால் கழுவுதல்—தேகசுத்தம்.)
(அகத்தூய்மை—உண்மை பேசுதல்—மனச்சுத்தம்)
மனப்பரிசுத்தமாயிரு.
கடவுளைப்போற்று.
சாந்தமாயும், பணிவாயும் இனிமையாயும் பேசு.
பிழையற கல்வி கற்றுக்கொள்.
விடாமுயற்சியைக் கைக்கொள்.
சகலரிடத்தும் அன்பாயிரு
மரியாதையாயும், நேர்மையாயும் நடந்துகொள்.
மூத்தோர் (கற்ருேர்) சொல்படி வணங்கி நட.

ஏழைகளுக்கும், பலஹீனர்களுக்கும், இதரர்களுக்கும் கூடிய உத்தாசை செய்.

லொழுக்கம் நன்றிக்கு வித்தாகும்.
தீயொழுக்கம் மைக்கு வித்தாகும்.
வாய்மையும் மனநேர்மையும் பூஷணமாகும். (ஆபரணம்.)
சனி, (புதன்) நீராடு.

சுத்தமான காற்றையும், சுத்தமான தண்ணீரையும் சுத்தமான உணவையும் உட்கொள்ளு.

ஜீவனாதாரத்துக்குத் தக்கதாக மிதமாக உண்

காலையிலாவது மாலையிலாவது உலாவு. (தேசபயிற்சியும் மனமகிழ்ச்சியும் தரும்.)

அமைதியுடன் இரவில் 8 மணி நேரம் (9 P. M. முதல் 5 A.M.) நித்திரை செய்.

(தூக்கமே இளைப்பாறுதல். அதிக நேரம் விழிப்பது தேக ஆரோக்கியத்துக்குக் கெடுதி).

அவசியத்துக்குத் தக்கதாக செலவுசெய்.

பொய் சொல்லாதே,

கெடுதி செய்யாதே. (தீங்கு விளைக்காதே)

[illegible] சச்சரவு செய்யாதே.

உத்தண்டமாகவும் அப்பிரியமுண்டாகவும் பேசாதே.

அவதூறு செய்யாதே.

(மூர்க்கம்) கோபம் கொள்ளாதே.

திருடாதே (களவாதே)

காமுறாதே.

பொறாமை, பேராசை கொள்ளாதே.

அகம்பாவம் கொள்ளாதே

இழிவான வார்த்தைகளை உபயோகிக்காதே.

சோம்பலைக் கைக்கொள்ளாதே.

அசுத்தமாயிராதே.

பகலில் தூங்காதே.

இருட்டில் போகாதே. (விஷஜந்துக்கள் இருக்கும்).

பாதரட்சையில்லாமல் வெளியில் போகாதே. (தொத்துவியாதி பற்றுதிருக்கும்)

கடும்வெயிலிலும் மழையிலும் அலையாதே.

ஆழமுள்ள தண்ணீரில் குதித்தும் நீந்தியும் விளையாடாதே.

தப்புக்கோட்பாடுகளினால் மனக்குழப்பமடையாதே.

சன்மார்க்க நியாய கோட்பாடுகளிலிருந்து விலகாதே.

வீண் செலவு செய்யாதே.

கடன் வாங்காதே.

மிதமிஞ்சி எதையும் உட்கொள்ளாதே.

லாகிரி வஸ்துக்களை உபயோகிக்காதே.

பொய்யும், மனக்கபடமும் அழிவையுண்டாக்கும்.

தீயொழுக்கம் எக்காலத்தும் நிச்சயமாய் துன்பம் தரும்.

காமமும் கோபமும் மிக இழிவானவை.

முயற்சியாலும் புத்தியாலும் விலக்கக்கூடியதான சோம்பலும் கெட்டகுணமும் கெட்டசெய்கையும் தலைவிதி (பிராரப்தம், கர்மம்) யால் உண்டாகிற தென்பது வீண்வாதமாகிய பேச்சு:

மூளையானது வெண்கலமணியின் ஒலியைப்போல தெளிவாயும் க்ஷவரக்கத்தியின் கூர்மையான முனையைப் போல தீக்ஷணமாயும் இருக்க வேண்டும்.

நன்மைக்கு நன்மை செய்வது மத்தியமம் (உலகவழக்கம்.)
கெடுதலுக்கு நன்மைசெய்வது உத்தமம் (சன்மார்க்க வழக்கம்.)
கெடுதலுக்குக் கெடுதல் செய்வது அதமம் (அநாகரிகவழக்கம்.)
நன்மைக்குக் கெடுதல் செய்வது அதமாதமம் (மிகவும் இழிவான வழக்கம்).

இளமைப் பிராயமுள்ளவர்களுக்கு சோபிதம் உல்லாசம், கபடமில்லாமை (யதார்த்தம்). முதுமைப்பிராயமுள்ளவர்களுக்கு சோபிதம் பெருந்தன்மை, தர்மகுணம், நேர்மை (யதார்த்தம்) பாசாங்கின்மை, புண்ணிய சீலம்,

தர்மமார்க்கங்களே மேன்மைக் குணங்கள், அவையாவன:--

தரிக்கப்படுவதும் பெறக்கூடியதும் தான் தர்மம். பரிசுத்தமனம், பரிசுத்தநடத்தை, பொறுமை, தாழ்மை, ஊக்கம், புத்தி, விவேகம், தேகபலம், மனோபலம், தீர்க்காலோசனை, கிரியை (நல்லவழிகளை உபயோகித்தல்), கீர்த்தி, லக்ஷ்மீகரம், திருப்தி, ஸ்திரபுத்தி, சிரத்தை, லஜ்ஜை, தானம், வ்ரதம், தியானம்:— மனத்தை அடக்குவது, மிக்கசாந்தனாக இருப்பது, இந்திரியங்களை அடக்குவது, கருணைபுரிவது, குரூரனாக இல்லாமலிருப்பது பிறர் பொருளைக்கவராமலிருப்பது, அப்பிரியங்களைச் செய்யாமலிருப்பது, தாய்தந்தைகளுக்குப் பணிவிடைசெய்வது, தேவதைகளை பூஜிப்பது, அதிதிகளையும் குருவையும் பூஜிப்பது, தகாதவைகளில் அருவருப்பு உண்டாவது, சுத்தனாகயிருப்பது.

பெரும்பான்மையாக (அபிமானம்) விருப்பும் (த்வேஷம்) வெறுப்பும் இல்லாதிருத்தலே ஆனந்தமயமான பிர்ம்மம்.

ஒரு வித கவலையுமில்லாமல் தெய்வபக்தியோடு பரிசுத்தமனதுடன் இருக்கைதான் நித்திய சுகம் (பரமானந்தம்.)

அன்பில் மேன்மையுள்ளது தாயின் அன்பு. அனுகூலத்தில் மேன்மையுள்ளது தகப்பனின் புத்திமதி. பக்தியில் மேன்மையுள்ளது தெய்வபக்தி, குருபக்தி. தானத்தில் மேன்மையுள்ளது அன்னதானம். தர்மத்தில் மே

ன்மையுள்ளது தூய்மையாம். வாழ்க்கையில் மேன்மையுள்ளது இல்லறதர்ம வாழ்க்கை. ஒற்றுமையில் மிக்கது சகோதரத்துவ ஒற்றுமை. ஆனந்தத்தில் மிக்கது மகவைத்தழுவதல், மழலைச்சொல்கேட்டல்.

போராட்டத்தில் மிக்கது சக்ளத்தி போராட்டம். பகையில் மிக்கது பங்காளியின் பகை.

சன்யாசமே உத்தமமான தவம்
இல்லற தர்மமே உத்தமமான தர்மம்.
பிர்மசர்யமே உத்தமமான வ்ரதம்.

நுகததடியில் பூட்டிய 2 காளைகள் ஒத்து கலப்பை (வண்டி)யை இழுப்பது போலவும் இரண்டு கண்களும் ஏகோபித்து ஒன்றையே பார்ப்பது போலவும் விவாகத்தினுல் இணைக்கப்பட்ட காதன் மனையாளும் காதலனும் மாறின்றி இல்லற தர்மத்தை நடத்துவதே தர்மார்த்தகாம மோட்சமாகிய புருஷார்த்தத்துக்கு ஏதுவாகும்.

வாதுக்குச் சண்டைக்குப்போவார் வருவார் வழக்குரைப்பார்
தீதுக்குதவியுஞ் செய்திடுவார்:—
ஓயாமற் பொய்சொல்வர் நல்லோரை நிந்திப்பருற்றுப் பெற்ற
தாயாரை வைவர் சதியாயிரஞ் செய்வர் சாத்திரங்க
ளாயார் பிறக்குபகாரஞ் செய்யார் தமையண்டினர்க்கொன்
றீயாரிருந்தென்ன போயென்ன காண்
ஏதுக்கிவர் பிறந்தார்
இறைவாகச்சியேகம்பனே.

போதும் பெருவிடற் பச்சிலையுண்டு புனலுண்டெங்கு
மேதும் பெருவிடினெஞ்சுண்டு தோணிபுரேசர் வண்டின்
றுதும் பெருதவடித்தாமரை சென்று சர்வதற்கே.
பத்தியடியவர்பச்கிலையிடினும்
முத்திகொடுத்து முன்னின்றருளிய வொருதனிக்கடவுளே.

(பட்டணத்தார் பாடல்.)

கடவுள் துணை.

## பெற்றோர்களின் கடமை.

1 பெற்றோர்கள் தங்களுடைய மக்களின் நன்மையைத் தேட வேண்டும்.

2 ஒவ்வொரு பெற்றோரும் தன்னுடைய மக்களை பழக்கவும் போதிக்கவும் சன்மார்க்கநீதியும் சட்டநிபந்தனையுமுள்ள பாத்தியமுண்டு

3. i. தாயுடைய அன்போடும் ஒழுங்கு பயிற்றுவிக்க தகப்பனுடைய உறுதிப்பாடோடும் கடும்பார்வையோடும் வரம்பு கடந்து சீராட்டி இடங் கொடுக்காமல் மக்களை வளர்க்கவேண்டும்.

ii வயதுக்கும், இனத்துக்கும் (ஆண், பெண) ஒத்ததாக வேறுபட்ட பரிமாணத்திலும் தக்கதருணத்திலும் சிக்ஷை விதிக்கவேண்டும்.

iii கடுஞ்சொற்களைப் பார்க்கிலும் இன்சொற்கள் அதிக நன்மையைத் தருகின்றன. கடுஞ்சொற்கள் கோரிய நன்மையைத் தருகிறதில்லை கோபித்தாலோ ஊக்கத்தை வீணாக இழக்கச்செய்கிறது. அது நன்மையை தருவதல்ல.

"He who spares the rod spoils the child"

கோலை வழங்காதவன் மக்களைக் கெடுக்கிறான்.

அதாவது:— செல்வத்தினால் வரம்பு கடந்த இடங்கொடுத்தலை தவிர்க்கவேண்டும்.

4 மக்களுக்கு வேண்டிய உபகாரணங்களில் முதலாவது ஜீவனுடைய பலவித ஊக்கங்களுக்கு நல்ல தேக ஆரோக்கியம். இரண்டாவது ஜீவனுடைய பற்பல வழிகளுக்கு மேன்மையான நடத்தை. மூன்றாவது புத்தியை தேர்ச்சி செய்யும் கல்வி

தந்தை மகற்காற்று உதவி நன்றி
யவயத்து முந்தியிருப்பச் செயல். (திருக்குறள்)

தந்தை மக்களுக்கு செய்யவேண்டிய இதமான உதவி, கற்றறிந்தவர்களுடைய சபையில் முந்தியிருக்கச் செய்வதுதான். அதாவது பூரணமாக கல்வி கற்பிக்க வேண்டியது.

மூடப்பிள்ளை தகப்பனுக்கு சத்துரு (நீதிசாஸ்திரம்)
(படிப்பிவிக்காத தகப்பன் பிள்ளைக்கு சத்துரு)

விவேகமுள்ள பிள்ளை தகப்பனை மகிழ்வுறச்செய்கிறான். மூடப்பிள்ளை தாயாருக்கு சுமை, பாரம்.

Adwise son maketh a glad father. A foolish son is the heavinessofthe mother

(Solomon, the wise)

6 கடன் வைத்த தகப்பன் பிள்ளைக்கு சத்துரு (நீதிசாஸ்திரம்)

7 பெற்றோர்கள் தங்களுடைய கொண்டாடத்தக்க விவேகமுள்ள செய்கைகளாலும் அன்பினாலும் தங்களிடத்தில் பயபக்தி, அன்பு, மதிப்பு உண்டாகும்படி மக்களுடைய மனதில் புகட்டி அவர்களுடைய தேக ஊக்கம், மனக்கிளர்ச்சி, மனமகிழ்ச்சி இவைகளின் பிரகிருதியைத் தெரிந்தும் அவர்களுக்கென்று உத்தேசித்திருக்கிற ஜீவனத்தின் பற்பல வழிகளையும் குறிப்பிட்டு நடத்தவேண்டும்.

8. பிறர்க்குத் தான் கடமைப்பட்டு செய்யவேண்டிய விஷயத்திற்கு பிரதிபலனை எதிர்பார்க்கக்கூடாது. பிரதிபலனை எதிர்பாராதிருத்தல் ஆசாபங்கத்தை (ஏமாற்றம்) உண்டுபண்ணாது.

## மக்களின் கடமை.

'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்'— (கொன்றைவேந்தன்).

1. சிச்ருஷையில் சிறந்தது மாதா, பிதா குருவுக்குச்செய்யும் சிச்ருஷை. அவர்களுடைய சாபம் உக்ரமாய்ப் பலிக்கும்.

2. (i) பெற்றோர்கள் தங்கள் வாழ்நாட்களில் துர்க்கதியடையாமலிருக்க அன்புள்ள மக்கள் எல்லாவற்றையும் அவர்கள் சுவாதீனத்தில் விடுவார்கள்.

(ii) பெற்றோர்களை நேசித்தும், கடவுளையும் வணங்குகிறவுமான மக்கள் கடைசியாக சுவர்க்கத்தின் தெய்வானுக்கிரகம் பெற்ற வாசஸ்தானத்தை அடைவார்கள்.

(iii) தெய்வ பக்தியுடன் மக்களுக்குரிய உண்மையான அன்பு சுகவாழ்வின் முடிவுக்கு நல்ல மக்களை இணங்கச்செய்வது நிச்சயம்.

(iv) பெற்றோர்களை நேசிக்கிற மக்களை மனிதர்கள் கண்ணியப்படுத்துவார்கள். கடவுள் அங்கீகரிப்பார்.

(v) அருமைப் பெற்றோர்களை மகிழ்விக்க கருத்துக்கொள்கிற மக்களை கடவுள் பார்க்கிறார் அவர்களை ஆசீர்வதிக்கிறார்.

3. (i) மக்கள் நன்றிபாராட்டி பெற்றோர்களைப் போற்றவேண்டும்.

(ii) பெற்றோர்களைப் போற்றாத மக்கள் தங்களுடைய மக்கள் தங்களைப் போற்ற எதிர்பார்க்கமுடியாது.

4. A wise son maketh a glad father,
A foolish son is the heaviness of the mother
(Solomon, the wise).

விவேகமுள்ளபிள்ளை தகப்பனை மகிழ்விக்கிறான் மூடப்பிள்ளை தாயாருக்கு சுமைபாரமாகிறான். மூடப்பிள்ளை தகப்பனுக்கு சத்துரு (நீதி சாஸ்திரம்.)

5 தந்தை சொல் மிக்க மந்திரமில்லை.

தாய் சொற்றுறந்தால் வாசகமில்லை. (கொன்றை வேந்தன்.)

பெற்றோர்கள் சொல்படி நடப்பது மக்களுக்கு நல்ல அதிர்ஷடமும் பிரபலமும் தரும்.

பெற்றோர்கள் சொல்லை மீறி நடப்பது மக்களுக்கு துர் அதிர்ஷ்டமும் துன்பமும் விளைவிக்கும்.

6 மக்களுடைய வணக்கமுள்ளவும் சந்தோஷகாமானவுமான நடத்தை பெற்றோர்களுடைய அன்பையும் பொறுப்பையும் விர்த்தி செய்கிறது.

7 தந்தை தாய்ப்பேண் (ஆத்திசூடி)

8 தாங்கள் நீதிநெறியாகவும் சட்டசம்மந்தமாகவும் ஒப்பந்தம் செய்து கொண்டாற்போலவே பெற்றோர்களுடைய அன்புக்கு நன்றியறிதலை உணர்ந்து மக்கள் கடமைப்பட்டு உதவிசெய்யவேண்டும்.

9 நன்னடத்தை எல்லாருடைய புகழ்ச்சியையும் ஆதாவையும் வருவிக்கிறது. துர்நடத்தை எல்லாருடைய அறுவறுப்பையும் விளைவிக்கிறது.

10 பெற்றோர்களைப் போலவே உபாத்தியாயர்களை கௌரவப்படுத்தி அவர்கள் சொல்படி மக்கள் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும்.

11 அடியில் சம்பிரமமான எருப்போட்டும் உசிதமான தண்ணீர் வார்த்தும் வளர்த்தவனுக்கு சந்தோஷமாக வளர்கின்ற தென்னமரம் தானகவே ஏராளமாயும் காலக்கிரமங்களிலும் இளநீர் காய்களையும் முதிர்ந்த காய்களையும் குலை குலையாக தருவதுபோல, நல்ல விர்த்தி அடைகிறவும் சம்பாதிக்கிறவும் நிலைமையிலுள்ள மக்கள், மதிப்புள்ள அன்பு பாராட்டல், நன்றிபாராட்டலுக்கு ஞாபகக்குறியாக பூர்ணமனமொப்பி உண்மையாயும் திருப்திகரமாயும் சேர்மையாயும் தேவையிலும் வருத்தத்திலும் இருக்கிறகாலத்தில், சுவய தேவைகளையும் சௌகரியங்களையும் நீக்கி தங்களுடைய சாதனங்களுக்கு மேலாக மக்களுக்கு தேகஆரோக்கியம், நன்னடத்தை படிப்பு இவைகளின் அபிவிர்த்திக்கு அதிக செலவு செய்த பெற்றோர்கள் இரக்ஷகர்கள் பந்துக்களுக்கு உபகாரம் செய்யவேண்டும் என்ற நீதி நிலையை அனுசரித்து நடந்துகொள்வது மக்களுக்கு மிக்க மேன்மையைத்தரும்.

குடும்பத்தினுடைய பரமானந்த சுகவாழ்வானது சண்டை முறண்பாட்டில்லாமல் அதிலுள்ள எல்லா அங்கத்தினர்களும் ஒற்றுமையாயிருப்பதை பூர்ணமாக அண்டியிருக்கிறது.

வீட்டிற்கு அகழகு இல்லறதர்மத்துக்குரிய மாண்புள்ள கணவன் மனையாள்

வீட்டிற்கு பாக்கியம் புத்தியுள்ள மக்கள், (திருஅருட்பேறு)
வீட்டிற்கு மகிமை உரித்தான தர்மம்
வீட்டிற்கு உயர்வு மனமுவந்து வரவேற்கும் உபசாரம்

கடவுளைப் போற்றி வாழ்க

## VI

## சங்கஸ்தாபனங்களுக்கு இன்றியமையாதனவாகிய அவசிய உருவ அமைப்புகள்.

ஊர்க்காரிய நடவடிக்கைகளின் ஊக்கங்களுக்கு உபயோகமான ஸ்தாபனங்கள் ஏற்படுத்த விலக்கமுடியாத தேவைகளுக்கு வேண்டிய பணமும், புத்திதேர்ச்சியும், வல்லமை தேர்ச்சியும், யோக்கியதை தேர்ச்சியும் அவசியமாயும் முக்கியமாயும் வேண்டும்

இந்தியா தேசம் செல்வகுறைவுள்ள தேசம் அல்ல. இந்தியாதேசம் புஷ்டியும் சம்பிரமுமான சாதனங்களுடையவுமானப் பிரதேசம் அவைகள் அதிக பலன் கொடுக்கத்தக்கவை. ஒரு கண்டத்தின் இயற்கை அமைப்பு தோற்றங்களை இத்தேசம் உடைத்து என்று பூகோள சாஸ்திரக்காரர்கள் விவரித்திருக்கிறார்கள். சிலாக்கியமான பலனை அடைய நுட்ப ஆராய்ச்சியுடன் அந்த சாதனங்களைப் பரிசோதிக்கவும் உபயோகப்படுத்தவும் உற்சாகமும் ஊக்கமும் உழைப்பும் விலக்கமுடியாத தேவைகளுக்கு வேண்டிய பணமும் முக்கியமாக வேண்டும் பண்டமாற்றுதலின் நோக்கத்தை விவரமாய் எடுத்துச்சொல்லி உற்சாகப்படுத்தி ஆதரணைசெய்து பரஸ்பர பலனை அடையும்படியாக விளையும் பொருள்களை பல இடங்களில் கொள்ளவும் விளையாப் பொருள்களைத் தருவிக்கவும் அது மிக்க சாதனமானது என்பதை வற்புறுத்தவேண்டும் பொதுஜன சாமான்ய நல்வாழ்கைக்கு இதுவே முக்கிய மூலமாகும். நல்வாழ்க்கையின் ஊக்கங்களுக்கு சிலாகிக்கத்தக்க இலக்ஷண பூர்த்திகளுடன் கூடிய சரீரதிடத்திலும், மனோதிடமுள்ள ஆரோக்கியத்திலும் கருத்துக்கொள்ளவேண்டும்.

பெரும் விலையுள்ள ஆடம்பரமான துணி உடுப்புகள். விலையுயர்ந்த ஆபரணங்கள், வீண் டம்பபிரதாபபற்றுள்ள கல்யாணக் கொள்கைகள் கொண்டாட்டங்கள், மதநியமங்கள், வழக்கிடுதல் இவைகளில் தனமுள்ளவர்களும் தனமில்லாதவர்களும் தனத்தை ஏராளமாய் விரயம் செய்கிறார்கள். தன் ஜீவனோபாய வாழ்க்கையின். உண்மை நிலைமையைத் தெரிந்து கொள்வதும் அதற்குத் தக்கபடி செலவு செய்வதுமான விவேகமுள்ள அறிவு ஒருவன் அடைய வேண்டிய எல்லாவித அறிவுகளிலும் மிக்க சிலாக்கியமானது.

கடமுண்டு வாழாமை காண்டலினிதே (இனிது நாற்பது)
He that goes borrowing goes sorrowing (Shakespeare)
செட்டான வழக்கங்கள், சாமான்ய வாழ்க்கை, கபடமற்ற செய்கைகள் உன்னதமான இலக்ஷண பூர்த்திகள். நன்னடத்தைகள் இவைகளைக் கைப்பற்றி பால்யர்கள், வயதுள்ளவர்கள், பணமுள்ளவர்கள், ஏழைகள் ஒவ்வொருவரும் சுவேச்சையாய் அவசியம் அப்பியசிக்க வேண்டும்.

அப்படி அப்பியசித்தல் வறுமையும் வெந்துயரையும் தீர்க்கும். ஜீவனோபாயத்தின் பற்பல வழிகளிலும் தாழ்வுள்ள பொதுவான பொருட்குறைவு உற்றகாலம் நேர்ந்திருக்கிறது. மரியாதையும் தகுந்தது மான ஜீவனோபாயத்தை தேடிப்பெறுவது சிரமமான வகையறுப்பாயிருக்கிறது.

நற்பலனைத்தரும் சங்கஸ்தாபனங்கள்தான் கிராமாந்திரங்கள் பட்டணங்களிலும் உள்ள சாமான்ய ஜனக்கூட்டங்களின் நிலைமையை உயர்த்துவிக்க மூலாதாரம். கிராமங்களிலும் பட்டணங்களிலுமுள்ள செல்வாக்குள்ளவர்களும் தனவான்களும் கற்றவர்களும் ஏற்றமும் தாழ்வுமுள்ள மனிதர்களோடு வித்தியாசமின்றி கூட்டுறவு செய்து தங்களுடைய சாதனங்களினாலும் தத்துவமுள்ள சொந்தச்செய்கைகளினாலும் ஊர்க்காரியங்களின் உபயோகமுள்ள நடவடிக்கைகளில் பால்யர்கள் பழகவும் வயதுள்ளவர்கள் அவைகளை உற்றுக்கவனித்து நடத்தவும் உபயோகமுள்ள ஸ்தாபனங்களை ஆரம்பித்தும் அவைகள் தொடர்ந்து நடைபெறும்படியாக ஒழுங்கு படுத்தவேண்டும்.

நூலாசிரியர்களும், கவிகளும், உபந்நியாசர்களும், பலவித கல்வி நிபுணர்களும் ஒரு தேசத்திற்கு இல்லாதிருக்க நீடியகாலம் இயலும். ஆனால் ஒருதேசம் செழிப்புற்று சிறப்புற்றோங்கவுமான நிலைமையையடைய வேலையாட்களும், கைத்தொழிலாளிகளும், உழைப்பாளிகளும் இல்லாமலிருக்க க்ஷணமாவது இயலாது இவர்களே வாழ்க்கை நிலைமைக்கு பிரதானமான ஆதாரம்.

சொந்த சம்மந்தமான செல்வாக்கை கையாளும் நோக்கத்தைக்கோறி சங்கங்களுக்கு சிலர் போகிறார்கள். அங்கிருந்தும் திரும்பிய பிறகும் புறம்பான சந்தர்ப்பங்களைக் கைக்கொண்டு முற்றும் மாறுபாடாகவே நடக்கிறார்கள். அல்லது அவ்விஷயங்களில் மேன் முயற்சி செய்கிறதில்லை.

இலக்குக் குறிகளைக்கொள்ளும் கேடகத்தின் உறுதியைப்போல கிராமவாசிகளின் நகரவாசிகளின் வசைகளையும் உட்பகைகளையும் வெல்லும் உறுதியை ஸ்தாபனங்களை ஏற்படுத்துகிறவர்களும் தொடர்ந்து நடத்துகிறவர்களும் கைக்கொள்ளவேண்டும்.

# விவாஹத்தினுடையவும், கோவில்களினுடையவும், தொன்று தொட்டு வழங்கும் உட்கொள்கைகள்.

கனமுள்ள கற்றறிந்தோர்களே!

கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன
செய்வகை செய்வான் தவசி—கொடிதொரீஇ
நல்லவை செய்வான் அரசன், இவர் மூவர்
பெய்யெனப் பெய்யும் மழை.—(திரிகடுகம்).

சிலர் தங்களுடைய இல்வாழ்க்கையின் தௌர்பாக்கியத்தால் மதசம்மந்தமான கொள்கைகளை மீறிநடக்க ஆவல்கொண்டு பால்ய விவாகத்தை எதிரிடையாகப் பரிந்துபேசினார்கள். சட்டம் ஏற்படுத்தி ஒத்தாசைசெய்ய கவர்ன்மெண்டார் அவர்களிடம் அவயமிட்டார்கள் சட்டம் பெறப்பட்டது. ஆனால் அதே நிலைமையில் இல்லாத சிலர் மனோவருத்தமடைகிறார்கள்.

i. We marry and love
ii. They court, love and marry.

Each has its own advantages and disadvantages in extenso.

(i) இந்து மதஸ்தர்கள் கல்யாணம்செய்து நேசிக்கிறார்கள்.

(ii) இதர மதஸ்தர்கள் மணத்தைநாடி நேசித்து கல்யாணம் செய்கிறார்கள்.

ஒவ்வொன்றிலும் நன்மையுள்ளவைகளும். நன்மை இல்லாதவைகளும் வெகு விரிவாயுள்ளன. அவைகளுக்கு தற்காப்பே முதன்மையாகும். அதற்கடுத்தது பெற்றோர் காப்பும், கணவன் காப்புமாகும். ஹிந்துமதத்தில் பல வகுப்பினர்களின் விவாகக் கொள்கைகள் வேறு. 1. கன்னிகாதானம் 2. பெண்எடுத்தல், 3. பிள்ளை எடுத்தல், தெய்வத்துவத்தை நீக்கி விவாகம் சிற்றின்பஉணர்ச்சியின் பொருட்டாகவே ஒப்பர்க்கொள்கையாகிறது. அக்கொள்கையுள்ளவர்கள் கல்யாணத்தை ரத்துசெய்தலோ அனேகம். பூர்த்தி விவாகம் (கர்ப்பாதான கல்யாணம்) தேக ஆரோக்கியமாய் செல்ல வேண்டிய வயதாகி இயற்கை முதிர்வு அடைந்தபிறகே நடந்து வருவது உண்டு. சிலருக்கு பூர்வமாபுள்ளதும், மதக் கொள்கையை அனுசரித்தும், கன்னிகாதானமாகிய ஆரம்ப விவாகம்செய்ய வயதுவரையரைச் சட்டம் தடைப்படுத்துகிறது, இல்லற தர்மத்தை நடத்தவேண்டிய கொள்கைதான் விவாகத்தின் முக்கிய பிரேரணை. மக்களுடைய க்ஷேம அபிவிர்த்தியில்

பெற்றோர்களில் பெரும்பான்மையோர் சிரத்தையுள்ளவர்களாயிருப்பது நிச்சயமே. சிறுபான்மையோர்தான் வறுமைக் கொடுமையினால் தங்கள் சுயநலத்தை மேலாகக்கொண்டும் மக்களின் வறுமை நீக்குதலை உத்தேசித்தும், அவர்களுடைய இல்வாழ்க்கை சிற்றின்பத்தை புறக்கணித்தும் அசாதாரணமான விவாகத்தை நிறைவேற்றுகிறார்கள். அதனால் மக்களிடத்தில் அன்புகுறைந்தவர்கள் அல்ல. திரவியலாபத்தையே மேலாக நாடுதல். விவாக மகிழ்வை தாழ்வுபடுத்துகிறது. மடம், நாணம், அச்சம், பயிர்ப்பு இக்குணங்கள் பெண்தன்மைக்குரிய இயற்கை சுபாவங்கள் தேர்ந்தெடுக்கும் சுவாவத்துக்குத்தக்க மனஉறுதிக்குறைவுள்ளவர்கள். மேலும் அவர்கள் சவனபுத்தியுடையவர்கள்.

நெடுங்காலமாய் தெய்வத்துவம் விளங்குவதற்கும் பாமரர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் கற்பிக்கவும், கோவில்கள் சாஸ்திரப்பிரகாரம் ஏற்பட்டு பூர்வ இராஜாக்களாலும் மடாதிபதிகளாலும் ஆசாரணை செய்யப்பட்டது. அதை இப்போது சிலருடைய சௌக்கியத்துக்காக வேறுபடுத்துவது உசிதமல்ல. இதைப்பற்றி நேற்றையதினம் (2–6–33) செய்த சனாதன தர்மசபை வரவேற்பு பத்திரிகையிலும், அக்கிராசனாதிபதியின் பிரசங்க புஸ்தகத்திலும் தெளிவாயும், பூர்ணமாயும் விவரித்திருக்கிறது. ஹிந்து மதத்தைவிட்டு இதர மதத்தில் சேர்ந்தவர்களில் பெரும்பாலார் சில ஹிந்துமதக் கொள்கைகளை அனுசரிக்கிறார்கள். (Converted Christians, converted Mahomedans) இதனால் ஹிந்துமத பிடிமானம் எவ்வளவென்பதை அறியக்கூடும்.

மத ஆசார கோட்பாடுகள் நடை, உடை, பாவனைகளை சரிவர அனுசரிக்காமலும் மததர்மஸ்தாபனங்களை கவனிக்காமலும் விட்டதினால் மததர்மஸ்தாபனங்களுக்கும் கோட்பாடுகளுக்கும் அணுகியிருக்கும் விபரீதங்களை விலக்கவும், அவைகள் தொன்றுதொட்டு நெடுங்காலமாயிருக்கிறதை நீடித்திருக்கவும் பகீரத பிரயத்தினம் செய்யவேண்டியது முக்கிய கடமையும் அத்தியாவசியமுமே.

"முயற்சியுடையோர் இகழ்ச்சியடையார்"

என்பதை மனதிலகொண்டு மன ஊக்கத்துடனும் மனக்கிளர்ச்சியுடனும் முயற்சி செய்யவேண்டும்.

**குறிப்பு:–** மாயவரத்தில் கூடின சனாதனதர்மசபையோரால் அங்கீகரிக்கப்பட்டது.

## AUTO-BIOGRAPHY

Narayana Ramachandra Jaya Ram, first born son at his father's age of 36, after long and eager expectations of his grand father, bred up in boyhood in indulgence and superfluity, educated at great costs, combated in manhood against the current needs of society actuated by pompous and selfish needs and aspirations, strove hard to maintain virtue, valour, and vigilance without vanity in his general character with self strong intents, determinations, reliances, led a contented, quiet life since retirement from Government service in 1922, suffered from serious illness in April 1927 (when his beloved and devoted wife, who was then seriously ill side by side succumbed to death), outlived for 15 years, had firm belief in the doctrine of transmigration of souls, took up hermitage in 1940 and departed in peace in 1942 for eternal good and rest.

May God bless with happy death and eternal bliss.

27TH APRIL 1927, MAYAVARAM.

**N. R. Jaya Ram.**